மேழிச்செல்வம்

மாதஇதழ்



RGANAPATHY

P. 802

MADRAS RECORD OFFICE
4 - APR 1963
MADRAS

சுபகிருது௵ மாசி௴

காய்கறி பெருக்க முயற்சி

25—1—1963 அன்று அடையாறு "ஔவை இல்லத்தில்" காய்கறி பெருக்க விழாவில் நடந்த மாணவிகளின் கலா நிகழ்ச்சி

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம் ௵ பிப்ரவரி-மார்ச் ௴

25—1—63 அன்று "ஔவை இல்லத்தில்" காய்கறி பெருக்க விழா

விழாவிற்குத் தலைமை வகித்த வேளாண்மைத் துறை நெறியாளரும் இதர பிரமுகர்களும



"ஔவை இல்ல" மாணவிகளின் கலா நிகழ்ச்சிகள்

கண்காட்சியில் வைக்கப்பட்ட "காய் கறிப் பெண்"

P. 802

உள்ளுறை

	பக்கம்.
காய் கறி பெருக்க முயற்சி	5
தமிழ் நாடெங்கும், சுமார் ஐந்து லட்சம் பேர் கொண்ட கிராமத் தொண்டர் படை ..	6
திராட்சைத் தோட்டத்தில் பசுந்தழை எருவின் சுயதேவைப் பூர்த்தி	10
உரங்களின் முழுப் பலனையும் பெற	11
சணப்பு சாகுபடி லாபமளிக்கிறது	14
புகையிலை உற்பத்தியைப் பெருக்க	15
விவசாயமும் பாசன நீரும்	19
ஆரஞ்சு மரங்களும் நோய் பூச்சி தாக்குதலும்	20
நெற்பயிரைத் தாக்கும் சூரைப் பூச்சியும் அதன் தடுப்பு முறைகளும்	22
விவசாயச் செய்திக் கதிர்	24
பங்குனி—சித்திரை மாத விவசாயக் குறிப்புகள்	26
1962-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை	27
இளம் விவசாயிகள் பயிற்சிக் கருத்தரங்கு	28
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	29

விளம்பரங்கள் :

கோத்தாரியின் சூப்பர்பாஸ்பேட்	4
ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி..	9, 18
பாரிஸ்	13
பேயர் அக்ரோ கெம் லிமிடெட்	23

அடுத்த முறை ஸுப்பர்பாஸ்பேட் உரம்
வாங்கும்போது, அது

கோத்தாரியின்
ஸுப்பர்பாஸ்பேட் தானா

என்று பார்த்து வாங்குங்கள்

REGD. TRADE MARK

பயிர்களின் நல் வளர்ச்சிக்கு பாஸ்பேட சத்து மிகவும் தேவை. கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட்டில் இந்த தாவர உணவு நிரம்பியுள்ளது அது வேர்களுக்கு பலத்தை அளித்து, பயிர்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தி, மகசூலைப் பெருக்குகிறது. ஒரு ஏகரா நிலத்திற்கு 100 கிலோ உரம் போதுமானது. நவீன சாகுபடி முறையில் அதிக லாபம் அடைவதற்கு இது சிறந்த வழி.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட், சிதறிக் கொட்டாதபடி, பலமான மிஷின் தையல் போட்ட மூட்டைகளில் கிடைக்கிறது.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட் மற்றும் கலப்பு உரங்கள் உபயோகித்து உங்கள் நில வளத்தைப் பன்மடங்கு பெருக்குங்கள்.

தயாரிப்பாளர்கள் :
ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ஓரியண்டல் பில்டிங்ஸ், ஆர்மேனியன் தெரு, மதராஸ்-1.

KS

மலர் 20 | சுபகிருது௵ மாசி௴—1963—பிப்ரவரி-மார்ச் | இதழ் 2

காய்கறி பெருக்க முயற்சி

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதி அன்று அடையாற்றில் உள்ள ஔவை இல்லத்தில் காய்கறி பெருக்க விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாநில வேளாண்மைத் துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை வகித்தார். இல்ல மாணவிகள் காய்கறிகள், பழ மரங்கள் போல் வேடம் தாங்கி, காய்கறிகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நடத்திக் காட்டிய கலா நிகழ்ச்சிகள் பெரிதும் பாராட்டுக்குரியதாயிருந்தது. காய்கறிகளால் அமைக்கப்பட்ட "காய்கறிப் பெண்" கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

வேளாண்மைத்துறை நெறியாளர் அவர்கள் தலைமை உரையில் நிகழ்ச்சிகளை பெரிதும் பாராட்டியும், தமது அன்றாட உணவில் காய்கறிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியும், காய்கறி பெருக்க முயற்சியில் ஈடுபடுமாறும் கூறினார். இதற்காக அரசாங்கம் அளிக்கும் சலுகைகளை முழுதும் பயன்படுத்திக் கொண்டு முழு முயற்சியுடன் செயல்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். குழுமியிருந்தோருக்கு காய்கறி நாற்றுக்களையும், உரமும் வழங்கினார்.

சென்னை நகர காய்கறி அபிவிருத்திக் குழு அங்கத்தினர்களான திருமதி. சரோஜினி வரதப்பன், திரு. வி. ஜி. ஆதிமூலம் அவர்களும் மற்றும் விவசாயச் செய்தி அலுவலர், மாவட்ட வேளாண்மைத்துறை, காய்கறி அபிவிருத்தி அலுவலர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் தேதி அன்று ஈச்சம்பாக்கம் கிராமத்தில் நடைபெற்ற காய்கறி பெருக்க விழாவை துவக்கி வைக்கும் வகையில் மாநில வேளாண்மைத் துறை நெறியாளர் கிராமத்தில் காய்கறி நாற்றுகளை முதலில் நட, மற்ற கிராம மக்களும் ஆர்வத்துடன் பெருவாரியாக நடவு செய்தார்கள். பின்னர் நடந்த கூட்டத்திற்கு திருமதி ராஜலக்ஷ்மி ரங்காச்சாரி, விவசாயிகள் மன்றக் கூட்டுக் காரியதரிசி அவர்கள் தலைமை தாங்கினார். வேளாண்மைத் துறை நெறியாளர் தமது உரையில் கிராம மக்கள் இன்றைய நாட்டின் நெருக்கடி நிலையை முன்னிட்டு சத்துள்ள உணவு அளிக்கும் காய்கறிகளை நிறைய வசதியுள்ள இடங்களிலெல்லாம் பயிரிடுமாறு கேட்டுக் கொண்டார். கிராம மக்களுக்கு காய்கறி நாற்றுக்கள், உரம், தழையுர போத்துக்கள் முதலியவைகளையும் வழங்கினார்.

திருமதி பார்வதி சீனிவாசன், மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களும், செயிண்ட் தாமஸ் மவுண்ட் வட்டார வளர்ச்சி அலுவலரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

விளைச்சலைப் பெருக்குவீர்! உணவு வீணாவதைத் தடுப்பீர்!!

பஞ்சாயத்துச் செய்திகள்

தமிழ் நாடெங்கும், சுமார் ஐந்து லட்சம் பேர் கொண்ட கிராமத் தொண்டர் படை

ஒற்றுமை உணர்வோடும் ஒழுக்க நெறியோடும் பணி புரியுமாறு தலைமைச் செயலாளர் அறிவுரை

"தீய சக்திகளை எதிர்த்துப் போராடும் துணிச்சல் கிராமவாசிகளிடையே வளர வேண்டும்; ஆயுத பலத்தைவிட மனோபலமே சிறந்தது"

நமது ஒப்பற்ற பிரதமர் நேருஜியின் வேண்டுகோளுக் கிணங்க, பாரத நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக் களிலும், "கிராமத் தொண்டர் படை" 26—1—1963-ல் ஆரம்பமாகியுள்ளது. பரங்கிமலை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 'பழவந்தாங்கல்' கிராமப் பஞ்சாயத்தில் நடந்த "கிராமத் தொண்டர் படை" துவக்க விழாவில், தமிழ் நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு எஸ். கே. செட்டூர், ஐ. ஸி. எஸ். அவர்கள் சொற்பொழிவின் சாரம் வருமாறு :—



திரு. எஸ். கே. செட்டூர், ஐ.ஸி.எஸ். அவர்கள் சொற்பொழிவாற்றுகிறார்.

ஒற்றுமை உணர்ச்சி.

"கிராமத் தொண்டர் படை பற்றிப் பேசுவதற்கு முன்னால், புதிய பஞ்சாயத்து நிர்வாகத்தின் அடிப்படைக் கருத்துக்களைப் பற்றி, சிறிது கூற விரும்புகிறேன். சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாட்டில் தாலுகா போர்டுகள், ஜில்லா போர்டுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நிர்வாக விஷயத்தில், இவை வெற்றி பெறவில்லை; தோல்வியடைந்தன. "தோல்வி அடைந்தன" என்று சொல்லும்போது, அதன் பொருளை நன்ருக அறிந்தே கூறுகிறேன்.

இந்தத் தோல்விக்கான காரணங்களில், முதலாவது, அந்த ஸ்தாபனங்களில் பொதுவான ஒற்றுமை லட்சியம் இல்லை. அடுத்த காரணம், பொது நல காரியங்களை நிறைவேற்றுவோரிடத்தில், ஒழுக்க நெறியும் நாணயமும் இல்லை. ஆனால், தற்போது பஞ்சாயத்துகளும், பஞ்சா யத்து யூனியன்களும் அமைக்கப்பட்டிருக்கும் முறை அப்படியல்ல. பழைய அனுபவத்திலிருந்து புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டு முன்னேறியிருக்கிறோம்.

பஞ்சாயத்தில், ஒரு காரியம் நிறைவேற வேண்டுமானால், ஒற்றுமை உணர்ச்சி வேண்டும். ஒவ்வொரு சார்பாரும் ஒவ்வொரு பக்கமாக இழுத்து, நமது சக்தியை வீணாக்கினால், மக்கள் நலனுக்காக நல்ல காரியம் எதுவும் உருப்படியாக நடக்காது. கட்சிச் சண்டையும் சச்சரவுகளும் பஞ்சாயத்தில் இருக்கக் கூடாது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கொள்கையை பஞ்சாயத்துக்கள் அமுல் நடத்த வேண்டும்.

ஒரு ஸ்தாபனம் நல்ல முறையில் நடக்க வேண்டுமானால், என்ன அபாயங்கள் வரும் என்பதை முதலில் தீர்க்கமாக ஆலோசித்த பிறகு, ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். அத்தகைய அபாயங்களை எதிர்க்கும் சக்தியை வளர்த்துக் கொண்டு, பொதுநல சேவை செய்யவேண்டும்.

நமக்கு, முதலாவதாக, ஒழுக்கம் (அதாவது நாணயம்) தேவை. பொதுமக்களின் பணத்தை செலவழிக்கும் போது, அது பயனற்ற வழியில் விரயமாகாமலும், வீண்போகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். சரிஇன்ற ஏரிக்கரைகளை உறுதியாக்க வேண்டுமானால், அவற்றை மராமத்து செய்வோர் (அதாவது, சிறிய நீர்ப்பாசன ஓவர்சியர்களும், கண்டிராக்டர்களும்) கவனத்தோடும், கருத்தோடும் அவற்றை பலப்படுத்த வேண்டும். ஊருணியின் கரைகளைச் சரிவரச் செப்பனிடக்கூடியவர்களிடம் அவ்வேலையை ஒப்படைக்க வேண்டும். அப் பணிகளைப்



ஆலந்தூர் பஞ்சாயத்து கிராமத் தொண்டர் படை அணிவகுப்பு.

பழுதின்றி முடிக்கும் வரை கண்காணிப்பு செய்ய வேண்டும். அப்படியின்றி, திறமையில்லாதவரிடம் அவ் வேலையை ஒப்படைத்து, பெயரளவில் கரைகளைப் பலப்படுத்தினால், பொது மக்களின் பணம் வீணாகிப் போகும். 'கண்டிராக்டர்' வேண்டியவர் என்பதற்காக, பொதுப் பணம் செலவழிப்பதில், நிர்வாகஸ்தர்கள் நாணயமாக நடக்காவிட்டால், வெள்ளம் வரும்போது கரைகளில் விரிசல் ஏற்பட்டுவிடும். எனவே தான், 'நேர்மையாகவும், ஒழுக்கமாகவும், பொது மக்களின் பணத்தைச் செலவிட வேண்டும்' என்பதை, வற்புறுத்திக் கூறுகிறேன். முன்பு, ஜில்லா கலெக்டரிடம் இருந்த முக்கிய அதிகாரங்கள், இப்போது பஞ்சாயத்து ஸ்தாபனங்களிடம் அளிக்கப்பட்டு வருகின்றன. பொது அமைப்புக்களில், ஒழுக்கக் குறைவு இருக்கத்தான் செய்கிறது. இந்தக் குறை இருந்தால், அமைப்புக்களின் சீரிய சேவையில், மாசு படிந்துவிடும். இந்த அவல நிலைக்கு ஆட்பட்டு, சில கூட்டுறவு சங்கங்கள், துவண்டு போன விவரம், நீங்கள் அறிந்ததே. ஆகவே, புதிய பஞ்சாயத்து ஆட்சியில், பொதுவான ஒற்றுமை லட்சியமும் திட்டங்களை நிறைவேற்றும் நிர்வாகஸ்தர்களிடம், நாணயமும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கிராமங்கள் தயாராகட்டும்!

சீன ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் இப்போது இருக்கிறோம். யுத்தமும் ரத்தக்களரியும் இனி இருக்காது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், பாதுகாப்புக்கான சக்தி நம்மிடம் குறைவு என்பதை நாம் நன்றாக உணரும் சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டுள்ளது. சீனாவோ வேறு எந்த நாடோ தாக்காமல் இருக்கும் வகையில், நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நெருக்கடியான எந்த நிலைமையையும் சமாளிக்க, ஒவ்வொரு கிராமமும் தயாராக வேண்டும். நம்மிடையே உள்ள குறைகள் சிலவற்றிற்கு உதாரணம் கூற விரும்புகிறேன்.

ரஸ்தாக்களில் அழகான மரங்களை வைத்து வளர்க்க, முன்பு ஜில்லா போர்டார் கஷ்டப்பட்டு ஏற்பாடு செய்திருப்பார்கள். கிராமத்தில் வாழ்பவர்கள் சிலர் அந்த மரங்களின் கிளைகளை அரிவாளாலோ, தொரட்டுக் கம்பாலோ, வெட்டிக் கொண்டு போய்விடுவார்கள். அதனால் பச்சை மரங்கள் நசித்துவிடும். அதைப் பார்க்கும் கிராமத்தார் யாரும் இந்தக் கெட்ட காரியத்தைத் தடுப்பதில்லை. தவறு செய்கிறவர்களைக் கண்டிக்கும் மனப் பண்பு நமது ஜனங்களிடம் வளர வேண்டும். அத்தகைய தைரியம் மிகவும் அவசியம். நமது சகோதரரைக் கத்தி கொண்டு தாக்க யாராவது வந்தால், அவர்களை எதிர்த்துத் தாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதே போல சமூக விரோதிகளை ஒடுக்குவதில் பயம் என்பதே கூடாது. பஞ்சாயத்து ராஜ்ய நிர்வாகம் வெற்றியடைய வேண்டுமானால், அதன் நிர்வாகத்தை நடத்துவோர், பழி நாணும் பண்பும், நேர்மையான ஒழுக்கமும், ஒற்றுமையில் தோய்ந்த இதயமும் படைத்தவராய் இருக்க வேண்டும்.

இந்தக் "கிராமத் தொண்டர் படை" யின் முக்கிய கடமைகளுள் ஒன்று, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியாய் இருப்பது. இந்தத் திட்டம், மொத்தத்தில் ஒரு செழுமை நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் ஒரு பெரிய முயற்சியாகும். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையின்போது, எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. படைக்கலங்களைவிட நமக்குப் போர் புரியும் மன வலிமை மிகவும் அவசியம். அந்த மன உறுதியை—எழுச்சியை—மக்களிடையே பரப்பும் பணியில் தொண்டர் படை, தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய ஓர் எழுச்சியை நாட்டில் உரு

உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

வாக்கித் தருமானால், இத் திட்டத்தின் நோக்கம் பெரிதும் நிறைவேறிவிட்டது என்று நாம் திருப்தி அடையலாம்.

குறிப்பாக, கிராமப் பொது நலத்துக்கான மராமத்து வேலைகளில் ஏதாவது தவறு செய்கிறவர்களை உடனே போலீசில் ஒப்படைக்கவேண்டும். ஏரி மதகுகளைத் திறப்பதில் "தில்லுமுல்லு" செய்வோரையும், ரயில் தண்டவாளங்கள், தந்திக் கம்பங்கள் முதலிய பொதுச் சொத்துக்களைப் பாழ்படுத்துவோரையும், கையும் மெய்யுமாகப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைக்கும் துணிச்சல், இத் தொண்டர் படையினருக்கு ஏற்பட வேண்டும். கிராமத் தொண்டர் படை, நாணயத்தையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வெற்றியடைய வாழ்த்துகிறேன்."

தலைமைச் செயலாளரின் சொற்பொழிவை, சென்னை அரசாங்கப் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். வெங்கடசாமி, மொழி பெயர்த்து விளக்கினார்.

செங்கல்பட்டு கலெக்டர், திரு. என். அனந்தபத்மநாபன் ஐ. ஏ. எஸ், விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் "இமயம் முதல் குமரி வரை உள்ள மக்கள் எல்லோரும் ஓரே இனம்" என்ற எண்ணத்துடனும், ஒற்றுமை உணர்வைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

விழாவில், காக்கி உடையும், சிவப்புத் தலைப்பாகையும் அணிந்த கிராமத் தொண்டர் படையினர் (ஆலந்தூர் பஞ்சாயத்து) அணி வகுத்துச் சென்றார்கள். கிராம மகளிரின் கோலாட்ட நிகழ்ச்சியும் நடந்தது. விழாவையொட்டி நடந்த பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, தலைமைச் செயலாளர் திரு. செடூர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அன்று காலை நிகழ்ந்த நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு அரசாங்க கிராம நலத் துறையின் உதவிச் செயலாளர் டி. வி. வெங்கட்ராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் கலந்து கொண்டார். அவர் பேசுகையில், "இந்திய எல்லையைக் காக்கும் ராணுவ வீரர்கள் மட்டுமல்லாமல் நாட்டு மக்கள் எல்லோருமே படை வீரர்கள்" என்றும், "நமக்குப் பின்னால் பெரும் சக்தியிருக்கிறது என்று எல்லை வீரர்கள் நினைக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று கூறினார்.

"கிராமத் தொண்டர் படை"யினருக்கு, பரங்கிமலைப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. டி. எஸ். ரகுபதி அவர்கள் அணிச்சின்னம் (பாட்ஜ்) அணிவித்தார். பழவந்தாங்கல் பஞ்சாயத்து உப தலைவர் திரு. எல்லையா நாயுடு அவர்கள் கொடி ஏற்றிவைத்தார். பழவந்தாங்கல் பஞ்சாயத்துத் தலைவர் திரு. கண்ணன் அவர்கள், உறுதி மொழியைப் படிக்க தொண்டர்கள் அனைவரும் சபதம் எடுத்துக்கொண்டார்கள்.

பிறகு, அரசாங்க உதவிச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன், கிராம வானொலி மன்ற தலைமை அமைப்பாளர் திரு எஸ். வெங்கடசாமி, செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் திரு. என். வி. சந்திரன் ஆகியோர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகள் சிலவற்றைச் சுற்றிப் பார்த்தனர்.

குறிப்பாக, குன்றத்தூரில் திரு. எம். கே. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. டி. வி. வெங்கட்ராமன் பேசுகையில், கிராமத் தொண்டர் படையில் மூன்று முக்கிய அணிகளின் வேலைத் திட்டத்தை விரிவாக விளக்கினார். திரு. சம்பந்தம் போன்ற பல்வேறு கட்சிப் பிரமுகர்கள், கிராமத்தொண்டர் படையின் நோக்கத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

வேளாண்மைத் துறைச் செய்தி

தீவிர உரமிடும் திட்டம்

(Intensive Manuring Scheme)

அரசாங்க ஆணை எண் 3901 (உணவு-விவசாயத் துறை)யின்படி தீவிர உரமிடும் திட்டம் செயல்படுத்தும் மாவட்ட அலுவலர்கள் ஒவ்வொரு நிதி யாண்டு முடிந்த பின்னும் கடன் வழங்கும் தொகை பற்றிய ஒப்புறுதி (financial sanction) வரும்வரை காத்திராமல் தொடர்ந்து இத் திட்டத்தின்கீழ் இரசாயன உரம் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கி வரலாம்.

சுயநலத்தைக் காட்டிலும்

நாட்டின் நலமே பெரிது.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய

இந்த எல்லா ஸ்ப்ரேயர்களும் மானியத் திட்டத்தின்கிழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் காண்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



கேடார்
அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவானம் செய்யும்.



மூன்று விதங்களில் தூவானம் செய்யும் ஹை-ட்ரீலான்சுடன்கூடிய கேட்டார் அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.

கையாலும், சக்தியாலும் இயக்கும் இதர பல ஸ்ப்ரேயர்களும், டஸ்டர்களும் நாங்கள் தயாரிக்கிறோம்.



மாருத்
கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.



அசைப்பு ஸ்ப்ரேயர்
கேடார்-கோ.·.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபயோகியுங்கள்.

மற்ற விபரங்களுக்கு
கீழே கண்ட
விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மலாடு—பம்பாய் 64.

போன் எண்கள் 84221, 84245

தந்தி : இல்லோகஸ்ட் மலாடு.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.

தந்தி : ஹோன்விட் போன் : 2971.

திராட்சைத் தோட்டத்தில் பசுந்தழை எருவின் சுய தேவைப் பூர்த்தி

திரு. ஆர். பெட்டை கவுடர், கே. எம். பி. நம்பீசன், சிவ. வெங்கடேசன், கனி ஆய்வு நிலையம், பெரியகுளம்.

பயிர்களுக்குப் பசுந்தழை எருவிடுவது யாவருமறிந்ததே. மதுரை மாவட்டத்தில், மைக்கேல்பாளையம், பட்டிவீரன்பட்டி போன்ற இடங்களிலும், மற்றும் இதர கிராமங்களிலும், திராட்சைப் பயிருக்கு மாட்டுத் தொழு எருவுடன் பசுந்தழை எருவிடுதல் சாதாரணமாகப் பழக்கத்தி லுள்ளது. திராட்சைச் சாகுபடி அதிகமாகிக் கொண்டிருக்கும் எந்த இடத்திலும், குறைந்த செலவில் நிறைந்த அளவு பசுந்தழை எரு கிடைப்பதில்லை. எனவே, திராட்சைப் பயிருக்கு வேண்டிய அளவு எருவிடுவதற்கு, அருகாமையிலுள்ள பகுதிகளிலேயே, குறைந்த செலவில் பசுந்தழை எருவை உற்பத்தி செய்தல் வேண்டும். பெரியகுளம் கனி ஆய்வு நிலையத்தில் கண்ட, பசுந்தழை எரு உற்பத்திக் குறிப்புகள், திராட்சைப் பயிரிடுவோருக்கு அதன் உற்பத்தியை நிர்ணயிப்பதற்கு உபயோகமாக இருக்கும்.

மேற்கூறிய நிலயத்தில் "கிளிரிசிடியா" பெருமளவில் பாதைகளின் இரு பக்கங்களிலும், வேலியின் ஓரங்களிலும், ஒரு பயிருக்கும் மற்றொரு பயிருக்குமிடையே எல்லைக் கோடு போன்றும் பயிரிடப்படுகிறது. இம்முறை பசுந்தழை எருவை வேண்டிய அளவு உற்பத்தி செய்து கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. மேலும், தழைகளை வெட்டியெடுக்கும்போது கிடைக்கும் குச்சிகளை பயிரிடுவோருக்கு நடுவதற்காக விநியோகம் செய்து அவற்றின் மூலம் உற்பத்தியைப் பெருக்கவும் பயன்படுகிறது. 50 செடிகளிலிருந்து ஒரு பருவத்தில் 1,111 கிலோ பசுந்தழை கிடைத்தது. அதாவது சராசரி ஒரு செடியினின்றும் 22·22 கிலோ தழை கிடைத்தது. ஒரு செடியினின்றும் சராசரி 24 குச்சிகளும் கிடைத்தன.

இந்நிலயத்தில், கவாத்து செய்வதற்கு முன்னால் திராட்சைப் பயிருக்குப் பசுந்தழை எருவிடுவதற்காக, ஒவ்வோராண்டிலும் நவம்பர் மாதத்திலும், மே மாதத்திலும் இங்குள்ள கிளிரிசிடியாச் செடிகளிலிருந்து தழை வெட்டியெடுக்கப்படும். இங்கு கோடை மழை நிச்சயமாகக் கிடைப்பதாலும் வட கிழக்குப் பருவக் காற்று நவம்பர் வரை வீசுவதாலும் முறையே, மே, நவம்பர் மாதங்களில் இச்செடிகளை வெட்டிவிடுவதால் எவ்விதத் தீங்கும் இச்செடிகளுக்கு ஏற்படுவதில்லை.

ஓராண்டிற்குச் சராசரி ஒரு கொடிக்குத் தேவையான பசுந்தழை 137 கிலோ கிராம் (300 ராத்தல்) என்று மதிப்பிடலாம். எனவே, ஒரு பருவத்திற்கான தேவை 68·5 கிலோ கிராம் (150 ராத்தல்). மேலே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விபரங்களிலிருந்து, மூன்று அல்லது நான்கு கிளிரிசிடியாச் செடிகள் ஒரு கொடிக்கான தேவையைப் பூர்த்தி செய்யுமென்பது விளங்கும்.

அதிக அளவில் திராட்சை பயிரிடக்கூடிய இடங்களில், நிலங்களின் ஓரங்களில் பசுந்தழை கொடுக்கும் செடிகளை நடுவது அவசியமாகலாம். திராட்சைத் தோட்டங்களில் பந்தலைச் சுற்றி பத்து அடி இடைவெளி விட்டு, கிளிரிசிடியாக் குச்சிகளை நடலாம். இவை பலமான காற்றைத் தடுப்பதற்கும் உதவியாக இருக்கும். ஜுன்–செப்டம்பர் மாதங்களில், திராட்சையில் சாதாரணமாக பிஞ்சுண்டாதலுக்கு இடையூறாக இருக்கும் பலமான பருவக்காற்றைத் தடுப்பதற்கு இவை பயன்படும்போது, இக் "காற்றுத் தடுக்கிகளின்" பயன் அளவிடற்கரியதாகும்.

நாட்டுக்கு உதவும் நல்ல பெண்

உழைப்பைப் பெருக்குவோம்

செலவைக் குறைப்போம்

சேதத்தைக் குறைப்போம் ! சேமிப்பைப் பெருக்குவோம் !!

உரங்களின் முழுப் பலனையும் பெற....

A. H. S. சர்மா, T. ரகோத்தம ராவ், S. இராமமூர்த்தி, விரிவினைப் பிரிவு, கோவை.

கணிசமான அளவு பயிர் உற்பத்தியைப் பெருக்க இன்றியமையாதது செயற்கை உரங்களேயாகும். விளைச்சலை அதிகரிக்க அத்தியாவசியமான இச் செயற்கை உரங்கள் தேவைக்குத் தக்க அளவில் கிடைப்பதில்லை. ஆகவே, கிடைக்கும் உரங்களில் சிறிதளவும் வீணாகாமல் இருப்பதற்கு நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு ராத்தல் உரத்திலும் அடங்கியுள்ள பயிருக்குத் தேவையான உரச்சத்துக்கள் எவ்விதத்திலும் பயனற்றுப் போகாமலிருக்க உற்ற வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உரங்களின் முழுப் பலனையும் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

1. தேவைக்கேற்ப உரமிடல்

கரும்புக்கு நெல்லைக் காட்டிலும் அதிக அளவு தழைச் சத்து தேவைப்படுகிறது. பருத்திக்கு, நெற்பயிரைவிட அதிகமான அளவு மணிச்சத்து தேவைப்படுகிறது. ஒவ்வொரு வகை நிலத்திலும் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் தேவைக்கேற்பவும் மண்ணில் அப்பயிர்ச் சத்துக்களின் குறைபாட்டைப் பொறுத்து உரமிட வேண்டும். இத் தேவையை உரப் பரிசோதனைகள் மூலமாகவும், மண் பரிசோதனை மூலமாகவும் அறிந்துகொள்ளலாம்.

2. வேர்களுக்கருகில் உரமிடுதல்

மண்ணில் இடப்படும் உரத்திலுள்ள சத்து, மண்ணிலுள்ள நீரில் கரைந்து வேரிழைகளினால் கிரகிக்கப்படுவதால் இதற்கு ஏதுவாக, படரும் வேர் மண்டலத்திற்கருகில் உரம் இருக்கும்படி உரமிடவேண்டும். இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுதான், மண்ணில் தூவி போட்டு இடுதல், கலப்பைச்சாலில் இடுதல், பயிர்களுக்குப் பக்கவாட்டில் வரிசையாக இடுதல், செடிகளைச் சுற்றி இடுதல் போன்ற பல முறைகள் கையாளப்படுகின்றன. உதாரணமாக பாஸ்பேட் உரங்களை, மண்ணில் இட்டவுடன் பலவிதங்களிலும் அதன் சத்து பயிருக்குக் கிடைக்காது போக நேரிடலாம். ஆதலால், மேற்கூறிய முறைகளுள் ஒன்றினைப் பின்பற்றி, பாஸ்பரஸ் உரங்களைப் பயிர்களின் வேர்களுக்கருகில் இடவேண்டும். இதனால் உரத்தின் கிட்டும் தன்மை அதிகரிக்கிறது.

3. மண்ணின் விகாரம் அல்லது கார அமில நிலை

மண் துகள்களைச் சுற்றிலும் பலவகை இரசாயனப் பொருட்கள் பல வடிவில் இருக்கின்றன. இவற்றின் தன்மையைப் பொருத்து மண்ணின் இரசாயன நிலை (soil chemical condition) மாறுபடும். மண்ணின் நிலை அல்லது விகாரத்தை, ஆங்கிலத்தில் pH என்று குறிப்பிடுகிறார்கள். மண்ணின் நிலை, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.—

(1) pH–7—நடுநிலை மண் (Neutral soil).

(2) pH-7-க்கும் குறைவு—அமில மண் (Acid soil).

(3) pH-7-க்கும் அதிகம்—கார மண் (களர்) (Alkaline soil).

மண் நடுநிலையிலிருந்தால்தான் உரச்சத்து முழுவதும் பயிர்களுக்கு எளிதாகக் கிட்டும். பாஸ்பேட் உரங்கள் அமில நிலையிலுள்ள மண்ணில், இரும்பு, அலுமினியம் ஆகியவற்றுடனும், கார நிலையிலுள்ள மண்ணில் சுண்ணாம்புடனும் சேர்ந்து இரசாயன மாற்றங்களால் பயிர்களுக்குக் கிட்டும் தன்மையை இழக்கிறது. மேலும் கார நிலையிலுள்ள மண்ணில் 'மாங்கனிசு', 'போரான்', துத்தநாகம் போன்ற சிறு மூலகங்களின் கிட்டும் தன்மை பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே செயற்கை உரங்களை இடுவதற்கு முன், அமில நிலையிலுள்ள மண்ணை சுண்ணாம்பிட்டும், கார நிலையிலுள்ள மண்ணை ஜிப்சம், தொழு உரம், பசுந்தாள் உரங்கள் ஆகியவற்றை இட்டும் திருத்தி மண்ணை நடுநிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

பசுந்தாள் உரம் விதைத்தாயா?

மண்ணின் மாற்றுத் திறனை (exchange capacity) மாற்றியமைத்தல்

மண்ணில் உரமிட்டவுடன் அவற்றிலுள்ள இரசாயனப் பொருள்களும், மண் துகள்களைச் சுற்றிஉள்ள இரசாயனப் பொருள்களும் ஒன்றையொன்று இடம் மாற்றிக் கொள்கின்றன. மண்ணில் ஏற்படும் இச் செயல் மூலம் தான், இடப்படும் உரத்திலுள்ள சத்து மண்ணை அடைகிறது. மண்ணின் இத் தன்மையைத்தான் 'மாற்றுத் திறன்' (exchange capacity) என்று குறிப்பிடுகிறோம். மண்ணின் மாற்றுத்திறன் அதிகமாக இருந்தால்தான் உரத்திலுள்ள சத்தும் அதிகமான அளவு செடிக்குக் கிடைக்கக்கூடிய வகையில் இருக்கும். மணற்பாங்கான மண்ணின் 'மாற்றுத் திறன்' குறைவாக இருத்தலால் அத்தகைய மண்ணில் இடும் உரத்தின் முழுப்பலனையும் பெற தொழு உரம், குப்பை உரம், பசுந்தாளுரம் போன்ற கரிம உரங்களை இட்டு மண்ணின் மாற்றுத்திறனை அதிகப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் மண்ணின் நீர் கோள் திறனும் அதிகரிக்கும். நீரில் கரைந்த உரச் சத்தும் வேர் மண்டலத்திற்கு அப்பால் செல்லாதிருக்க ஏதுவாகிறது.

உரச் சத்தின் தன்மைக்கேற்ப உரமிடவும்

உரச்சத்தின் தன்மையைப் பொறுத்து தக்க பயிர்ப் பருவங்களில் உரமிடவேண்டும். தழைச் சத்து போன்ற நீரில் எளிதில் கரையக் கூடிய சத்தை உடைய உரங்களை ஒரே தடவையில் இடுவதை விட இரண்டு பகுதிகளாகப் பிரித்து இட வேண்டும். நாற்று நடும்போதும், பயிர் முதிர்ச்சி அடையும் தருவாயிலும், ஆக இரண்டு தடவைகள் இடலாம். இதனுல் உரச்சத்து நீரில் கரைந்து பயிர் வளர்ச்சிக்குப் பயன்படாமல் போவதை ஓரளவுக்குத் தவிர்க்கலாம். தண்ணீரில் உடனடியாகக் கரையாத சத்துக்களையுடையவை தானியச் சத்தும் சாம்பல் சத்துமாகும். இவைகளைக் கொண்ட உரங்களை கடைசி உழவின் போது நிலத்திலிட்டு மூடிவிடவேண்டும். இவ்வாறு செய்தால் பயிர்ச்சத்து சிறிது சிறிதாக வளரும் பயிருக்குக் கிடைக்க ஏதுவாகிறது.

மண் ஈரம்

செடிகளின் வேர்கள் தங்களுக்குத் தேவையான பயிர்ச் சத்தை மண்ணிலுள்ள 'நீர்க் கரைசல்' (soil solution) மூலம்தான் அடைகின்றன. ஆகவே இடப்படும் உரம் கரைந்து, பயிர்களுக்குக் கிடைக்க, படரும் வேர் மண்டலத்தில் எப்போதும் போதுமான ஈரம் இருக்கவேண்டும். அதற்குத் தக்கவாறு பயிர்களுக்குத் தேவையான அளவில் நீர் பாய்ச்ச வேண்டும்.

மானுவாரி அல்லது புஞ்சை நிலங்களுக்கும் போதிய மழை பெய்தால், செயற்கை உரங்களை இடலாம்.

பயிர்ச் சத்து வீணுவதைத் தடுங்கள்

காற்று, நீர் ஆகியவற்றுல் ஏற்படும் மண் அரிப்பினுல் விலை மதிக்க முடியாத உரச் சத்துக்கள் வீணுகிறது. இதைத் தடுக்க, வரப்புக் கட்டுதல், சமதள வரப்பிடுதல், படியமைத்தல் (terracing) போன்ற மண் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு மண் அரிப்பைத் தடுத்து பயிர்ச்சத்துக்கள் வீணுவதைத் தவிர்க்க வேண்டும்.

பாஸ்பேட் உரங்களை மறைமுகமாக இடுதல்

பாஸ்பேட் உரங்களைத் தேவையான பயிருக்கு (முக்கியமாக நெல்லுக்கு) நேரடியாக இடுவதற்குப் பதில் அப்பயிருக்கு முன் அதே நிலத்தில் வளர்க்கப்படும் பசுந்தாளுரங்கள் மூலம் இடுதல் ஆகும். செஸ்பேனியா போன்ற பசுந்தாள் பயிரின் வேர் முடிச்சுகளில் தழைச் சத்து சேகரிக்கும் தன்மையுடைய நுண் அணுக்கள் (Bacteria) உள்ளன. பாஸ்பரச் சத்து இவற்றின் தழைச் சத்து சேகரிக்கும் திறனை அதிகப்படுத்துகிறது. மேலும் பசுந்தாளுரப் பயிர்களுக்கு, மற்ற பயிர்களைக் காட்டிலும் மண்ணிலுள்ள பாஸ்பேட் சத்தை கிரகிக்கும் தன்மை அதிகம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, இத்தகைய சத்து மிக்க பசுந்தாளுரத்தை அதே நிலத்தில் மடக்கி உழுதால் அந்நிலத்தில் வளரும் பயிரின் மகசூல் அதிகரிக்கிறது.

சூப்பர் ஊட்டப்பட்ட கம்போஸ்ட் (Reinforced compost)

கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் போது ஒவ்வொரு வரிசையிலும் சூப்பர் பாஸ்பேட் உரத்தை இலேசாகத் தூவ வேண்டும். இவ்வாறு செய்வதால் அதிக அளவு தானியச் சத்து பயிருக்கு எளிதில் கிடைக்கிறது.

செடிகளுக்கு இலைகள் மூலம் உணவைச் செலுத்தல்

விஞ்ஞான விவசாயம் முன்னேறிவரும் இந் நாட்களில் உரங்களை நிலத்திலிடுவதற்குப் பதில் பயிர்களின் இலைகளுக்கே நேரிடையாக அளிப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கலாம் என்று தெரிகிறது. இம் முறையில் பயிருக்குத் தேவையான உரங்கள் நீரில் கரைக்கப்பட்டு பயிர்ச் செடிகளின்மேல் தெளிக்கப்படுகின்றன. இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆராய்ச்சியின் முடிவுகள் திருப்திகரமாக இருந்தால் இம்முறையை அனைவரும் கையாண்டு பலனடையலாம்.

ஆகவே மேற்கூறிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு உரமிடுவதன் மூலம் இடப்படும் விலை மதிக்க முடியாத பயிர் உணவுச் சத்து வீணுவதைத் தடுத்து உரத்தின் முழுப் பலனையும் பெறலாம்.

உற்பத்தியைப் பெருக்கச் சுலபவழி இரசாயன உரம்

பயிர் பூச்சிகளுக்கு...



போரில் தோல்வியே...

பாரீஸ் பூச்சி நாசினிக் கலவைகளின் மகோன்னத பூச்சிநாச சக்தியினின்றும் பூச்சிகள் நழுவித் தப்புவது அசாத்யம். ஏனெனில் பாரீஸ் பூச்சி நாசினிகள் எல்லாவகைப் பயிர் பூச்சிகளையும் அடியோடு அழிப்பவையாகும்.

பென்ஸிக்ளோர்
டி. டி. டி
மலாதியான்
எண்ட்ரின்
ஆல்டிரின்

Parry's

பூச்சிநாசினி
கலவைகள்



மேலும் இதர, குறிப்பான விவரங்களுக்கு எழுதி விசாரிக்கவும்:

ஈ. ஐ. டி. பாரி லிமிடெட்,

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பெர்டிலைசர் இலாகா (I & F), டேர் ஹவுஸ், சென்னை-1

4Z-1304 TM

சணப்பு சாகுபடி லாபமளிக்கிறது

(சி. கே. ராஜகோபாலன், உதவியாளர், சிறு தானியப் பண்ணை, கோயமுத்தூர்-3).

சணப்பு மிக சுலபமாக சாகுபடி செய்யக்கூடிய ஒரு சிறந்த பசுந்தழை உரம். இது அதிக பலனும், லாபமும் கொடுக்கக் கூடியது.



கோவை விவசாயக் கல்லூரியிலுள்ள சிறு தானியப் பண்ணையில் 1961-வது வருடத்திலும் வழக்கம்போல் சணப்பு பயிரிடப்பட்டது. பயிரின் விளைச்சல் நன்றாக இருந்தது. (படம் பார்க்கவும்.) மொத்தம் 6·25 ஏக்கர்களில் பயிரிடப்பட்டன. இதில் 3 ஏக்கர்கள் விதை உற்பத்திக்காக விட்டு வைக்கப்பட்டன. மிகுதி இடத்திலிருந்து செடிகளை அறுவடை செய்து கம்போஸ்டு உரம் செய்யப்பட்டது.

இப்பயிர் சாகுபடி புள்ளி விவரம் கீழ்வருமாறு :—

	ரூ.	ந.பை
(1) பயிர் சாகுபடிக்கு மொத்தச் செலவு (6·25 ஏக்கர்).	412	95
(2) 3 ஏக்கராவிலிருந்து கிடைத்த 1,055 கிலோ விதையின் மதிப்பு.	580	25
(3) 3·25 ஏக்கராவிலிருந்து கிடைத்த 20,000 பவுண்டு தழையின் மதிப்பு.	446	43
மொத்தம் ..	1026	68
	1,026	68
(4) 6·25 ஏக்கருக்கு மதிப்பிடப்பட்ட லாபம்	412	95
மொத்தம் ..	613	73

சணப்பு சாகுபடிகூட முறைப்படி செய்தால் லாபமளிக்கக்கூடியது! விவசாயிகளே, இவ்வுண்மையை உணர்ந்து பலனடையுங்கள்!

மாநில திராட்சைப் பயிர் விளைச்சல் போட்டி

1962-63-ல் நடந்த மாநில திராட்சை பயிர் விளைச்சல் போட்டியில் முதற் பரிசு பெறுபவருக்கு "உத்தியான பண்டிதர்" என்ற பட்டம் வழங்கப்படும். இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம்:—

	பெயர் (1)	பரிசு (2)	பரிசுத் தொகை (3) ரூ.
1	திரு. என். தில்லைகோவிந்தன், பட்டிவீரன்பட்டி, மதுரை மாவட்டம்.	முதற் பரிசு.	500
2	திரு. எஸ். என். பால கிருஷ்ணன், டி. பி. எப். டெக்ஸ்டைல்ஸ், மேட்டுப் பாளையம், கோயம்புத்தூர்.	2-வது பரிசு.	100
3	திரு. ஆர். குமாரசுவாமி, சின்னிபாளையம், நஞ்சுது குளி போஸ்ட், ஈரோடு வட்டம், கோவை.	ஷ	100
4	திரு. வ. ஜனார்தனம், காவேரி பட்டினம், கிருஷ்ணகிரி வட்டம், சேலம்.	ஷ	100

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் ஏப்ரல் 63-ல் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்.

கிடைக்குமிடம். (1)	கையிருப்பு எண்ணிக்கை. (2)	ஒன்றின் விலை. (3) ரூ. ந.பை.
தென்னை நாற்றங்கால்—		
சோழவந்தான், மதுரை ஜில்லா.	5,000	0·65
குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.	4,500	0·65
கோயமுத்தூர், கோயமுத்தூர் ஜில்லா.	400	0·65
பட்டுக்கோட்டை தஞ்சாவூர் ஜில்லா.	2,000	0·65
விசுவாசபுரம், கன்யாகுமரி ஜில்லா.	3,000	0·65

உழவர் விரும்புவது உயர்தர விதையே

புகையிலை உற்பத்தியைப் பெருக்க

கே. சப்தரிஷி, மாநில புகையிலை அபிவிருத்தி அலுவலர், சி. என். சுப்பிரமணியன், புகையிலை அபிவிருத்தி உதவியாளர்.

தம்பி : நமஸ்காரம், அண்ணா !

அண்ணா : வாங்க தம்பி, வாங்க : இவங்க யாரு ? தெரியலியே.

தம்பி : இவருங்களா ? நம்ப கிராமத்திலேயே பண்ணையம் செய்கிறவரு. வந்தாருங்க என்னைப்பார்க்க. அப்படியே கூட்டிக் கிட்டு வந்தேனுங்க. நஞ்சை புஞ்சையெல்லாம் நிறைய இருக்கு. பாக்குத் தோப்பு, பருத்திக்காடு இப்படியெல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளுகிறார். புகையிலை மட்டும் 40 ஏக்ரா வருடா வருடம் பயிர் செய்கிறார்.

அண்ணா : அப்படிங்களா ? நமஸ்காரம், நமஸ்காரம். வாங்க. உட்காருங்க. நிக்கிறீங்களே !

அண்ணா : என் தம்பி, புகையிலையின்னு சொன்னீங்களே வாய்ப் புகையிலை தானே (chewing) ?

தம்பி : ஆமாம் அண்ணே ! அதிலென்ன சந்தேகம் ?

அண்ணா : இல்லை தம்பி, வாய்ப்புகையிலை மாதிரி, நாட்டுச் சுருட்டு புகையிலை, சுருட்டுகளை சுருட்ட (wrappers) உபயோகிக்கும் தழைகள் ; பில்லர்கள் (fillers) என்ற பல ரகங்களிருக்கின்றன.

தம்பி : அப்படிங்களா ! நீங்க கேட்டதிலேயும் ஒரு விஷயம் தெரிஞ்சுகிட்டேனுங்க. சரி விஷயத்திற்கு வருவோம். இவரு இந்தத் தடவை பாருங்க புகையிலை வைப்பதற்கு ரொம்ப கஷ்டப்பட்டு போயிட்டாருங்க. 40 ஏக்ராவிற்கு நடவு செய்யப்பட விருந்த நாற்றுங்கால் கெட்டு போச்சுங்க. அதனால் காரைப் போட்டுக்கொண்டு ஊக்கத்தைக் கைவிடாமல் ஊர் ஊராகச் சுற்றி, பணத்தைப் பணம் என்று பாராமல், நாற்று விடப்பட்ட இடங்களெல்லாம் அலைந்து வாங்கி வைத்திருக்கிறார்.

அண்ணா : அப்படிங்களா ? இந்த கஷ்டங்களையெல்லாம் நீக்கி புகையிலையின் விளைச்சலை அதிகப்படுத்தவும் தக்கசமயத்தில் நோய் நொடிகளினின்றும் காப் பாற்றவும் அரசாங்கத்தாரால் புகையிலை அபிவிருத் தித்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்கென கோவையில் ஒரு ஆபீஸரை நியமித்திருக்கின்றனர். அவருக்கு உதவியாக கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருச்சி ஆகிய நான்கு இடங்களில் நான்கு உதவியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் அந்தந்த வட்டாரங்களில் நல்ல முறையில் நாற்று விடுக் காண்பிக்கின்றனர்.

தம்பி : என்ன அண்ணே, நல்ல முறை அது என்னங்க ?

அண்ணா : பாருங்க தம்பி, இவங்களெல்லாம் பாத்தி போட்டிருப்பதைப் பார்த்திருப்பீங்க. சாதாரணமாக வரம்பு எடுத்துக்கட்டி சுமார் 3′–3½′ அகலமும், 10′–20′ வரைகூட நீளமுள்ள பாத்திகளை (Flat beds) போடுகின்றனர். விதையும் படி படியாகக் கொட்டி தெளிப்பார்கள். அதுவும் ஆடி மாதம் 18-ம் தேதிக்குப் பிறகு நாற்றுங்கால் விடுவது வழக்கம்.

தம்பி : ஆமாம், தெரியுமுங்க.

அண்ணா : இந்த காலத்தில், ஆவணி, புரட்டாசி மாதங் களில் மழை தொடர்ந்தாற்போல் விட்டு விட்டும் பெய்ய ஆரம்பிக்கிறது. நாற்றுங்கால்களில் நாற்றுகள் வேறு நெருக்கமாக இருக்கும். தண்ணீர் வேறு தேங்கியிருக்கும் இதனால் பூஞ்சண நோய் ஏற்பட்டு நாற்றுகள் அழுகிப்போய் விடுகின்றன. மேலும் இன்னும் பல விவசாயிகளுக்கு மருந்தடித்தால் காப்பாற்ற முடியும் என்று தெரிவதில்லை. ஆதலால் இந்தக் குறைபாடுகளை இந்த அலுவலகம் நல்ல முறையில் நாற்றுக்களை எப்படியெடுக்க முடியும், வலுவானகால் உள்ள நாற்றுக்களை எப்படி உற்பத்தி செய்ய முடியும் என்பதை மேடைப் பாத்தியிட்டு, விதைகளைத் தெளிவாகத் தெளித்துக் காண்பித்து விளக்குகின்றனர்.

தம்பி : என் அண்ணே, மேடைப் பாத்தியென்றால் என்ன? விதைகளை தெளிவாகத் தெளித்தல் என்றால் எப்படி ? இதைப்பற்றி கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்க.

அண்ணா : தம்பி பூமியை நன்றாக உழுத பிறகு கட்டி முட்டியில்லாமல் தட்டி விட்டு, குறிப்பிட்ட அளவுள்ள பாத்திக்கு வரப்புகளைப் போடுதல, 9½′ நீளம், 5′ அகல முள்ள வரம்புகளை முதலில் போட்ட பிறகு ஒவ்வொரு பாத்தியிலும் நன்கு புறமும் சுமார் ½ அடி உள்ள வாய்க்கால் எடுத்து அந்த மண்ணை மத்தியிலிட்டு தட்டி விட்டால் மேடை மாதிரியிருக்கும். தண்ணீர் வாய்க் காலில் விட்டு பாத்திகளுக்குக் கட்டும் பொழுது முதலில் தண்ணீரானது பாத்தியின் சுற் றுப் புறத்திலுள்ள பள்ளத்தில் பாய்ந்து பிறகு திட்டு மாதிரியுள்ள மேடை போன்ற இடத்தில் பாயும். இந்த மாதிரி பாத்திகளுக்கு மேடைப் பாத்தி என்று சொல்வது. இந்த மாதிரி சமனப் படுத்திய ஒவ்வொரு பாத்திக்கும் 2 இரும்புச் சட்டி அளவு நன்றாக பொடி செய்யப்பட்ட தொழு உரம் போதுமானது. அந்த எருவை பாத்தியில் ஒரே சீராகப் பரப்பி தட்டி விட்டு விடவேண்டும். பாத்தி சிறியதாக இருப்பதால பள் ளம், மேடு அதிகமில்லாமல் நன்றாக சமமாக்க முடி யும். தண்ணீர் பாயும்போது ஒரே அளவாக பாத்தியில் நிற்கும்.

தம்பி : நீங்க சொல்றத பார்த்தா, இது ரொம்ப சௌகரியமாக இருக்கும்போல தோணுதுங்க.

அண்ணு : சௌகரியம்தானு, மழை காலங்களிலே மழை அதிகமாய் பெய்வதால், உடனே தண்ணீரானது பாத்தியின் சுற்றிலுமுள்ள பள்ளத்தில் இறங்கி விடுவதால், முளைத்தழுந்த சிறு நாற்றுகளுக்குக் கருகில் தண்ணீர் தேங்கி கெடுதல் செய்யாமல் காப்பாற்ற முடிகிறது. சாதாப் பாத்திகளில் அம்மாதிரி தண்ணீர் உடனடியாக வடிக்க முடியாது.

தம்பி : ஆமாங்க, இந்த மாதிரி பாத்திக்கு எவ்வளவு விதை தெளிக்கவேண்டும் ?

அண்ணு : தம்பி, வேடசெந்தூர் ஆராய்ச்சிப் பண்ணையிலே 1 கிராம் விதையிருந்தாலே போதும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த மாதிரி 6 பாத்திகளிருந்தால் முதல் தடவையிலேயே 1 எக்ரா நடவு செய்யமுடியும். பாத்தி ஒன்றுக்கு 1,000 நாற்றுகள் வீதம் 2, 3 தடவை நாற்று எடுக்கவும் முடியும்.

தம்பி : ஆச்சரியமாக இருக்த அண்ணே ! இந்த வேடசந்தூர் பண்ணை எங்கயிருக்கு அண்ணே !

அண்ணு : அது திண்டுக்கல்லிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது. புகையிலை ஆராய்ச்சிப் பண்ணையும் பார்ப்பதற்கு சாதாரணமாக இருந்தபோதிலும், புகையிலையைப்பற்றி ஆராய்ச்சி நிறைய நடந்து கொண்டிருக்கிறது.

தம்பி : அப்படிங்களா ? போய்ப் பார்க்கணும், சொல்லுங்க !

அண்ணு : பார்த்தா மட்டும் போதாதுங்க. கத்துக்கணும் தம்பி! நல்ல விஷயங்களை கேட்டுத் தெரிஞ்சுக்கணும். இங்கு நாட்டுச் சுருட்டு, சுருட்டுக்களைச் சுற்ற உபயோகிக்கும் பலரகப் புகையிலை ராசிகள், முதலானவற்றைப்பற்றி பல உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். வருடத்தில் சுமார் ஐந்து எக்ரா நாற்றங்கால் புகையிலைக்கெனப் பாததியிட்டு விளைவிக்கும் காட்சியே தனி அலாதிங்க !

தம்பி : 5 எக்ரா நாற்றங்காலிட்டு எத்தனை எக்ரா பயிர் செய்யறது ? எப்படி இவ்வளவு நாற்றங்காலையும் நல்ல முறையில் எடுக்க முடியும ? மேலும் இதற்கு ஆகிற செலவு கட்டுபடியாகுங்களா ! என்னங்க, ஒண்ணும் புரியலையே !

அண்ணு : தம்பி, மதுரை ஜில்லாவிலே அநேகமாக எல்லா விவசாயியும் நாற்றங்கால் தனியா விடுவதையே மறந்திட்டாங்க. யாரைப் பார்த்தாலும் வேடசெந்தூருக்குப்போய் வாங்கிக்கிடுவோமே என்று சிவனேனனு இருப்பாங்க. 5 எக்ரா நாற்றங்கால் எப்பொழுதும் நட்டமானதாகத் தெரியலேயுங்க. அதேமாதிரி தான இந்த 2 வருடமாக பவானி சாகரில் சுமார் 2 எக்ரா புகையிலை நாற்றங்காலிட்டு நல்லமுறையில் விற்பனை செய்திட்டு வராங்க, தம்பி !

தம்பி : பேஷ், பேஷ். பவானி சாகரிலும் அந்தமாதிரி செய்யறுங்களா ? அப்போ, நம்ம பக்கத்து விவசாயிகளுக்கு கொஞ்சம் கவலை விட்டதுன்னு சொல்லுங்க.

அண்ணு : தம்பி, கொஞ்சமென்ன? முக்கியமாக கோவை மாவட்ட விவசாயிகள் கவலையற்றுத் தூங்கலாமென்று சொல்லுவேன். என்னு, அரசாங்கப் பண்ணையில் விதைப்பதால், நல்வித்துக்களை நல்ல முறையிலிட்டு, தக்க சமயத்தில் மருந்து தெளித்து வியாதியற்ற செடிகளை விநியோகம் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடனிருக்கலாமில்லையா, தம்பி ?

தம்பி : பின்னே இல்லைங்களா ?

அண்ணு : பாருங்க தம்பி (1960–61)-ல் சுமார் 6–7 லட்சம் நாற்றுக்களை உற்பத்திசெய்து விலைக்குக் கொடுத்திருக்கின்றனர். இந்த வருடமும் சுமார் எட்டு லட்சம் உயரிய ஜாதி நாறறுக்கள் உற்பத்தி செய்தனர். மீனம்பாளையம் என்று சொல்லப்படும் வாய்ப்புகையிலையின் பொறுக்கு வித்துக்களும், நாட்டு சுருட்டு செய்யும ஊசிக்கப்பல் ராசிகளும், சுருட்டிற்கு சுற்றும் (wrapper) புகையிலை ராசிகளும், மேடைப் பாத்தியிட்டு கண்காணிப்பாளர் அவர்கள் மிகுந்த கவனத்துடன் எல்லோருடைய தேவையையும் உணர்ந்து ஓரளவு பூர்த்தி செய்திருக்கிறார்கள். கோவை மாவட்டததில் இந்த ஆண்டு மழையின் காரணத்தால் பலருடைய நாற்றங்கால் கெட்டுப் போய்விட்டதால், மனஞ் சோர்ந்துபோயிருந்த விவசாயிகள் கூட பவானிசாகர் பண்ணையில பெயர் பதிவு செய்திருக்கிறோம் என்ற எண்ணத்திலே பாதிக் கவலையை மறந்து தூங்கினர் என்று சொல்லலாம்.

தம்பி : ஏன் அண்ணே, இந்த நாற்றுக்கள் என்ன விலைக்குக் கொடுக்கிறுங்க ?

அண்ணு : பாருங்க தம்பி, புளியம்பட்டிப் பக்கத்திலே 1,000 நாற்றுக்கள 15-லிருந்து 25 ரூபாய் வரை வித்திருககாங்க. ஆனால், பவானி சாகர் பண்ணையில் 1,000 நாற்றுக்கள் ரூ. 3 (மூன்று) என்று விற்ருர்கள். என்னு, அரசாங்கப் பண்ணையில் பணம் ஒனறே பிரதானமாகக் கருதாமல் விவசாயிகளுக்கு நல்ல முறையில நாற்றுக்களைக் குறைந்த விலையில் கொடுக்கவேண்டுமென்ற நோக்கம்தான். இந்த இரண்டு ஆண்டில் இந்த அலுவலகம் சுமார் 150—200 எக்ராவிற்கு புகையிலை நாற்றுக்கள் விநியோகம் செய்திருப்பது விளையாட்டான காரியமா ? எதுக்குச் சொல்ல வந்தேன்னு, இந்த மாதிரி மேடைப் பாத்தியிட்டு நாற்றுங்காலிடுவதால் நாற்றுக்கள் நல்ல முறையில் வரும் என்பதறகுத்தான்.

தம்பி : ரொம்ப சரி. ஏன் அண்ணே, கரும்பு, நெல், பருத்தி பயிர்களுக்கு உரம் கடன்லே கொடுக்கிறுர்களே, அந்த மாதிரி புகையிலைக்கு ஏனுங்க கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடாது ?

மாருத் சார்ஜ் பம்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்

சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்

(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினுல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்துகழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்நதவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்		290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்		280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு	— — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிம்க ராஜா ரோடு, பெங்களூர்.

அண்ணு : தம்பி, நானும் அதுபத்திதான் சொல்லணும்னு நினைச்சேன். நீங்களே கேட்டிட்டீங்க. நம்ம அரசாங்கமும் இந்த ஆண்டு புகையிலைக்கும்கூட கடன்லே பணம் கொடுக்கிருங்க.

தம்பி : பேஷ், பேஷ் அண்ணே, இதை முதல்லே ஏன் சொல்லலே, பாவம், என்னை பல விவசாயிகள் கேட்டிட்டிருந்தாங்க. அதைப்பத்திக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்க. இவரும் தெரிஞ்சிக்கிட்டடுங்க.

அண்ணு : கேளுங்க தம்பி, நம்ம சர்க்காரு புகையிலைக்குன்னு எட்டு லட்சம் ஒதுக்கியிருக்காங்க.

தம்பி : அப்படிங்களா ? பணம் கடன்லே எப்பொழுது தருகிருர்கள்? ஏக்ராவிற்கு எவ்வளவு கொடுக்கிருங்க என்பதையும் விபரமாகச் சொல்லுங்கோ.

அண்ணு : தமிழ் நாட்டைப் பொறுத்தவரை முக்கியமாக 13 டிவிஷன்களுக்கு அதாவது கோயமுத்தூர், பொள்ளாச்சி, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, கரூர், அரியலூர், மன்னுர்குடி, கடலூர், உசிலம்பட்டி, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகியவைகளுக்கு புகையிலையின் உற்பத்தியைப் பொறுத்து பங்கீடு செய்யப்பட்டுள்ளது. புகையிலை சாகுபடி செய்பவர்களுக்கு ஏக்ராவொன்றிற்கு ரூ. 100 வரை கொடுக்கலாமென்றும் 5 ஏக்ரா செய்திருந்தால் ரூ. 500 வரை பெற்றுக்கொள்ளவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்கள் தேவையை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் சென்று தகுந்த விண்ணப்பத்தில் எழுதி கிராமநல ஊழியர்களின் (Gramasevaks) அத்தாட்சி பெற்று, பயனடையலாம்.

தம்பி : ஆமாங்க, பணத்தைப்பற்றி எவ்வளவு கிடைக்கும் என்பதைப்பற்றி நன்ருகச் சொன்னீங்க. ஆனு, இதற்கு என்னென்ன உரம் கிடைக்கும், எதை வைத்தால் நல்லது என்றும் சொல்லுங்க.

அண்ணு : கேளு தம்பி, புகையிலைக்கு அமோனியம் சல்பேட், யூரியா, கால்சியம் அமோனியம், நைட்ரேட் போன்ற உரங்களை உபயோகிக்கலாம். இவை விவசாய பாங்குகள், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இரண்டாம் நம்பர் 'கலப்பு உரம்' (Standard Mixture No. 2) சாலச் சிறந்தது என்று, நடத்திய உரப் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

தம்பி : அதெப்படிங்க ? சல்பேட்டைக் காட்டிலும், யூரியா, புண்ணக்கு இவைகளைத் தனியாகவோ, அல்லது கலந்தோ வைத்துப் பழக்கமாயிடுத்துங்களே? மிக்ஸர்உரம் வைப்பதால் எப்படி ஆதாயம் ? நன்ருக வருங்களா ? அப்படி வைப்பதானுல் எவ்வளவு வைக்கவேண்டிய என்ற விவரங்களையும் சொல்லுங்கோ தெரிஞ்சுக்கலாம் !

அண்ணு : தம்பி, மிக்ஸர் உரத்தில் (Standard mixture) 2-ம் நெம்பர் இருக்கு. இந்த கலப்பு உரத்தில் புகையிலைக்கு வேண்டிய எல்லாச் சத்து ரெடியா கலந்து வைத்திருக்காங்க. இந்த உரத்தை சென்ற ஆண்டு பரீட்சார்த்தமாக தமிழ் நாட்டிலே 100 இடங்களில் பரிசோதனை செய்துபார்த்ததிலிருந்து அறியமுடிகிறது. மிக்ஸர் உரமிட்ட பகுதி மிக்ஸர் உரமிடாத பகுதியைக் காட்டிலும் சராசரி அரை பாரத்திற்கும் அதிகமாக மகசூல் கிடைக்கும் என்று நிரூபனமாகி இருக்கிறது. மேலும், மிக்ஸர் உரமிடுவதால் புகையிலை அம்பாரத்தில் பூப்பு நன்ருகவும் காரம், குணமுள்ளதாகவுமிருக்கிறது என்று விவசாயிகளும் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றனர். மிக்ஸர் உரம் புகையிலைக்கு எந்தவிதமான கெடுதலும் செய்யாமல் நல்ல தரமுள்ள புகையிலை விளைவிக்க முடியும் எனபதைக் காட்டுகிறதல்லவா ? மேலும் எளிதில் கிடைக்கிறது. ஏக்ராவொன்றிற்கு 500-லிருந்து 600 ராத்தல் வரை வைத்தாலே போதுமானது. இதன் சத்து புகையிலைக்கு மட்டுமின்றி அதற்கு அடுத்துப் பயிர் செய்யப்படும் சோளம், கம்பு, ராகி போன்ற பயிர்களுக்கும் பயன்படுகிறது.

தம்பி : அப்படிங்களா, ரொம்ப சந்தோசமுங்க. ரொம்ப நேரமா எங்களுக்கு இவ்வளவு நல்ல விஷயங்களையெல்லாம் சொன்னீங்க. ரொம்ப நன்றி. உங்களுக்கு ரொம்ப கஷ்டம் கொடுத்துவிட்டோம். போய் வருகிறேம்.

அண்ணு : ஆமாம் தம்பி எனக்கும் நேரமாயிடுத்து. இதிலே என்ன கஷ்டங்க. உங்களுக்கு இன்னும் எவ்வளவோ புகையிலையைப்பற்றி சொல்ல இருக்கு. இன்னும் சமயம் கிடைக்கும்போது சொல்லுகிறேன் தம்பி. இன்னென்று சொல்ல மறந்திட்டேன்: உரம் வாங்கும்போது அத்தாட்சிப் பெற்ற விற்பனையாளரிடமிருந்து கலப்பு உரம் நெம்பர் 2 தானு என்றும், மூட்டைகளில் சீல் உடையாமலிருக்கிறதா என்று பார்த்து வாங்கவேண்டும். கூட்டுறவு சொஸைட்டிகளில், கிடங்குகளில் வாங்குவது மிகவும் நல்லது. அப்போ, நேரமாச்சு தம்பி, போய் வாரீங்களா.

தம்பி விவசாயி } : போய் வரோமுங்கோ. வணக்கம் !

வணக்கம்.

விவசாயமும் பாசன நீரும்

அ. கோபால்சாமி, இரசாயன உதவி ஆசிரியர், விவசாயக் கல்லூரி, கோவை.

பரந்த வெளியெங்கும் தண்ணீர் காணப்பட்டாலும், பாசனத்திற்கு எல்லா வகை தண்ணீரும் பயன்படுவதில்லை என்பது நம்மில் சிலருக்குத் தெரியாதிருக்கலாம். சிறந்த பயிர் வளர்ச்சிக்கு வளமுள்ள மண்ணும், வளமூட்டும் உரங்களும் மட்டும் போதாது. பாசனத்திற்கு நல்ல தண்ணீரும் தேவைப்படுகிறது. ஆகையால், பாசனத்திற்கு உகந்த நலல தண்ணீர் என்றால் என்ன? அந்தத் தண்ணீரின் தன்மைகள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். நல்ல நிலததை களர் நிலங்களாக்குதற்கும் உவர் நிலங்களாக்குவதற்கும் பாசன நீருக்கும் ஓர் பங்கு உண்டு. ஆகையால் நிலத்தின் தன்மையை நிர்ணயிப்பதற்கு, பாசன நீரும் ஓர் கா ணம் என்பது தெரிகிறதல்லவா ?

தண்ணீரின் தன்மைகளை நிர்ணயிப்பது அதில் கரைந்திருக்கும் பொருள்கள்தான். ஆகவே, இத்தகைய பாசன நீரின் தன்மைகளையும், அந்த நீரினால் நிலத்தில் உண்டாகும் மாற்றங்களையும், அதனால் பயிர் விளைச்சலில் உண்டாகும் வித்தியாசங்களையும் அறிந்து கொள்வது, விவசாயிகள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

தண்ணீரின் தன்மையை நிர்ணயிக்கும் அம்சங்கள்.--

(1) கரையும் உப்புக்களின் மொத்த அளவு.

(2) சோடிய உப்புக்கும் இதர மூலகங்களுக்கும் உள்ள விகிதாசாரம்.

(3) பயிருக்குத் தீங்கு இழைக்கக்கூடிய (Toxic) போரான் (Boron) போன்ற மூலகங்களின் அளவு.

(4) கால்சியம், மக்னீசயம், பை கார்பனேட்டுகளின் அளவுகள் முதலியன.

1. **மின் கடத்து திறன்** (slectrical conductivity).—தண்ணீரை பல வகையாகப் பிரிப்பதற்கும் நீரில் கரை பொருள்களின் மொத்த அளவைத் தெரிந்து கொள்வதற்கும், தண்ணீரைச் சோதிக்கவேண்டும். இச்சோதனையை மின் கடத்து திறனைக் கொண்டு எளிதாகவும், விரைவாகவும், கண்டுபிடிக்கலாம்.

உப்புணர்வு கொண்ட பயிர்கள் (salt sensitive crops).—250 முதல் 750 மைக்ரோமோஸ் வரை மின் கடத்து திறனைக் கொண்ட நீரில் பாதிக்கப்பட்ட போதிலும், பொதுவாக ஒரு செண்டிமீட்டருக்கு 750 மைக்ரோமோஸ் மின் கடத்து திறனைக் கொண்ட நீரைப் பாசனத்திற்கு பயன்படுத்தலாம். சுமார் 750 முதல் 2,250 மைக்ரோமாஸ் மின் கடத்து திறனைக் கொண்ட நீர், பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சிறந்த கண்காணிப்பும், போதிய வடிகால் வசதியும் அவசியம். இல்லையேல் நீர் பாயும் நிலம் களர் நிலமாகிவிடும். இந்த அளவுக்கு அதிகமுள்ள நீரின் உப்புத் தன்மையைத் தாங்கும் சக்தியுடைய பயிர்கள்தான் விளையும்.

2. **சோடியம் புறக் கவர்ச்சி விகிதம்** (sodium apsorption ratio).—பாசன நீரிலுள்ள முக்கிய நேர்மின் அயனிகள் (Cations) கால்சியம், மக்னீசியம், சோடியம் முதலியனவாகும். முக்கிய எதிர்மின் அயனிகள் கார்பனேட்டு, பை கார்பனேட்டு, சல்பேட்டு, குளோரைடு முதலியனவாகும். பாசன நீரிலுள்ள நேர்மின் அயனிகளின் அளவைப் பொருத்துத்தான் நிலத்தில் களர்த் தன்மை உண்டாகிறது. சோடியம் அதிகமாக இருந்தால் களர்த் தன்மை அதிகரிக்கும் ; கால்சியமும், மக்னீசியமும் அதிகமாக இருந்தால் களர்த் தன்மை குறையும்.

3. **போரான்** (boron).—இயற்கையாகக் கிடைக்கும் எல்லாத் தண்ணீரிலும் போரான் மிகச் சிறிய அளவிலேயே காணப்படுகிறது. மேலும், பயிர் வளர்ச்சிக்கு போரான் மிகவும் அவசியம். ஆனால் குறிப்பிட்ட சிறிய அளவுக்கு மேல் இது காணப்பட்டால் பயிர்களுக்கு தீங்கிழைக்கும். ஆனால் இது தீங்கிழைக்கும் அளவுக்கு சாதாரணமாக பாசன நீரில் காணப்படுவதில்லை.

பலவகைத் தண்ணீரில் போரான் கலந்திருக்கவேண்டிய சாதகமான அளவுகள்.

சிறிது மென்மையான பயிர்கள்.	போரான் அதிக அளவு தாங்கும் பயிர்கள்.	மிகுந்த அளவு போரான் தாங்கு பயிர்கள்.
பத்து லட்சத்தில் 0·33 (–) 1·25 பாகங்கள்.—	பத்து லட்சத்தில் 0·67 (–) 2·5 பாகங்கள்.—	பத்து லட்சத்தில் 1 (–) 3·75 பாகங்கள்.—
எலுமிச்சை,	உருளைக்கிழங்கு,	வெங்காயம்,
நாரத்தை,	தக்காளி,	முட்டைக்கோஸ்,
ஆரஞ்சு,	கோதுமை,	கேரட்டு முதலியன.
பேரி முதலியன.	பார்லி முதலியன.	

4. **பைகார்பனேட்டுகள்** (bicarbonates).—பைகார்பனேட்டுகளை நிறையக்கொண்ட நீரில் கால்சியமும் மக்னீசியமும் கார்பனேட்டுகளாக வீழ்படிதலாவது வழக்கம். இதனால் இவற்றின் அளவு குறைந்து சோடியத்தின் அளவு அதிகரிக்கும். நீரில் சோடியத்தின் அளவு அதிகரிப்பதால் உண்டாகும் அபாயம் நாம் அறிந்ததே.

மேலே கூறியவற்றிலிருந்து நீரின் தன்மைகளையும், அதனால் பயிரில் ஏற்படும் மாற்றங்களையும் நாம் தெரிந்து கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை உணரலாம். நம் மாநில வேளாண்மைத் துறை, நீரை இலவசமாக பரிசோதனை செய்து, அவற்றின் தன்மைகளைக் கண்டறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிக்கிறது. ஆகவே, உங்கள் நிலத்தில் பாயும் நீரின் தன்மைகளை அறிந்து கொள்ள, மாதிரிக்கு கொஞ்சம் தண்ணீரை எடுத்து, ரெயில்வே பார்சல் மூலம், கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலயத்திற்கு அனுப்பிவைக்கலாம். அதற்கான மாதிரி எடுக்கும் முறையை நீங்கள் தெரிந்து கொள்வது நலம்.

மாதிரி எடுக்கும் முறை.—ஒரு கண்ணாடி புட்டியை எடுத்து எந்த நீரை பரிசோதனைக்கு அனுப்ப விரும்புகின்றோமே, அதே நீரினால் இரண்டு அல்லது மூன்று முறை கழுவி, பின்னர் நீரைப் புட்டியில் அடைக்க வேண்டும். தண்ணீரை ஊற்றுக் குழாயிலிருந்து (pump) சேகரிக்க வேண்டியிருந்தால், பதினைந்து நிமிடங்கள் வரை நீரைக் கீழே விட்டுவிட்டுப் பின்னர் புட்டியில் பிடிக்கவேண்டும். இந்த மாதிரி சேகரித்த நீரே பரிசோதிக்கப்படவேண்டும். கவலை ஏற்றத்தில் நீர் இறைப்பதாக இருந்தால் ஒரு மணி நேரமாவது, இறைத்த பின்னர்தான் மாதிரிக்காக நீர் எடுக்கவேண்டும்.

பதினைந்து நாட்களுக்குள்ளாக, நீங்கள் அனுப்பிய நீரைச் சோதித்து உங்களுக்கு அவற்றின் தன்மைகளை இரசாயன வல்லுநர் தெரிவிப்பார். அத்துடன், போட வேண்டிய உரங்களைப் பற்றிய சிபாரிசுகளும் வழங்கப்படும். ஆகவே, உங்கள் நிலங்களுக்குப் பாயும் நீரின் தன்மைகளை பரிசோதனை செய்து, அதன்படி விவசாயம் செய்வது எல்லா விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆரஞ்சு மரங்களும் நோய் பூச்சி தாக்குதலும்

இரா. பெத்துராசு, விவசாயப் பிரிவு, பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், கொடைக்கானல் வட்டாரம்.

நோய் தாக்கப்பட்ட மரம்

கொடைக்கானல் வட்டாரத்தில் 3,000 அடி முதல் 5,500 அடி உயரத்தில், ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய 60 அங்குல மழையும் பெய்யக்கூடிய கீழ் பழனி மலைப் பகுதியில், 1584·93 ஏக்கரில் லூஸ்ஜாக்கட் ஆரஞ்சு (Mandarin Orange) பயிர் செய்து வருகிறார்கள். இதற்கு போதிய கவனமில்லாததால் நோய்களுக்கும் பூச்சிகளுக்கும் இலக்காகி ஆரஞ்சு மகசூல் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

நோய்.—சாம்பல் நோய் (Powdery Mildew), ஆரஞ்சு புற்று நோய் (Citrus Canker), சுள்ளித் தட்டல் (Die-Back or Wither Tip), வேர் அழுகல் (Root-rot) போன்ற நோய்களால் பெரும் சேதம் ஏற்படுகிறது.

பூச்சி.—ஆரஞ்சு செடி தண்டு குருத்துப்புழு (Citrus Stem Borer), இலைப்புழுக்கள் (Citrus Leaf-Miner), அசுவனி (Aphids), ஆரஞ்சு பழம் துளைக்கும் குளவி வண்டு (Citrus Fruit sucking Moth), போன்ற பூச்சிகளால் சேதம் ஏற்படுகிறது.

பெரும்பாலும் இப் பகுதியில் சாம்பல் நோயால் பெரும் அளவில் சேதம் ஏற்படுகிறது. முதலாண்டு சாம்பல் நோய் தாக்குதல் ஏற்பட்டு மறு வருடம் 'டைபேக்' வியாதியால் பாதிக்கப்பட்டு மரம் பூராவும் காய்ந்து விடுகிறது. 1959–60–ல் 200 ஆரஞ்சு மரங்களுக்கு நோய், பூச்சி தடுப்பிற்காக மரம் ஒன்றிற்கு 100 ராத்தல் தொழு உரம், 3 ராத்தல் சூப்பர் பாஸ்பேட் உரம் வீதம் போட்டு, மரங்களுக்கிடையில் ஊடுபயிராக 'பக் வீட்' (Buck wheet) என்னும் பசுந்தாள் உரப்பயிர் 60 ராத்தல் விதைக்கப்பட்டது. இந்த உரப் பயிர் மேல் கண்ட 200 ஆரஞ்சு மரங்களின் வேர் பாகத்திற்கு வேண்டிய ஈரத்தை பாதுகாக்க ஏதுவாக இருந்தது

(1) ஆரஞ்சு மரங்கள் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் புதுத்துளிர் விட்டு பூக்க ஆரம்பித்தன. புதுத்துளிர் விட்ட ஒரு வாரத்தில் சாம்பல் நோய் பீடிக்க ஆரம்பித்தது. முன் பட்டம் சாம்பல் நோய் தாக்கப்பட்டு கவனிப்பு இல்லாமல் விட்ட மரம் இலைகள் பூராவும் உதிர்ந்து மிலாருகளாக நின்றன. இதற்கு உடனடியாக தண்ணீரில் கரையக்கூடிய 'கந்தகம்' (Wetable Sulphur) ஒரு ராத்தலை, 30 காலன் (75 படி) தண்ணீரில் கலந்து தெளிக்கப்பட்டதில் 85 சத வீதம் மரங்கள் காப்பாற்றப்பட்டன.

(2) இரண்டாவது முறையாக மேற்கூறிய 200 மரங்களின் சுள்ளிகளை எடுத்துவிட்டு 5 : 5 : 50 போர்டோ சுக்கு கலவையுடன், 'பாலிடால்: ஒரு அவுன்ஸ்' $12\frac{1}{2}$ காலன் தண்ணீர் என்ற விகிதத்தில் சேர்த்து தெளிக்கப்பட்டது. பாலிடால் சேர்க்கப்பட்டதால் இலைப்புழு, அசுவனி, தண்டு துளைக்கும் புழு இவைகளினின்று பாதுகாக்கப்பட்டது.

(3) மறு முறை செப்டம்பர், அக்டோபரில் புது துளிர் விட்டு பூக்க ஆரம்பித்தது. இது பின் பட்டம். இதற்கு முன் பட்டத்தில் செய்த மாதிரி ஒரு ராத்தல் தண்ணீரில் கரையக்கூடிய கந்தகத்தை 75 படி தண்ணீரில் கலந்து அதனுடன் 50 சத பி. எச்.சி. ஒரு ராத்தலை சேர்த்து கலவையாக்கி தெளிக்கப்பட்டது. இதனால் சாம்பல் நோய் தடுக்கப்



'பக்வீட்' பசுந்தாள் உரப்பயிர் தெளிக்கப்பட்ட ஆரஞ்சு தோட்டம்

பட்டதுடன், கொழுந்து, மொட்டுக்களின் சத்தை உறிஞ்சி சேதப்படுத்தும் அசுவனிப்பூச்சி, இலையினுட்சென்று இலைகளை சுருண்டுவிடச் செய்யும் இலைப்புழுக்கள், போன்றவைகளும் கட்டுப்படுத்தப்பட்டன.

மறுமுறையாக 1960-61-ல் முதலாண்டு செய்யப்பட்ட முறைகளை மீண்டும் செய்து 'பக் வீட்' போடப்பட்ட பாகத்தை மண்வெட்டியால் கொத்தி, குத்து பீன்ஸ் (Dwarf Beans) பயிர் செய்யப்பட்டது. முன் கூறியபடி (முன் பட்டம், பின் பட்டம்) கரையக் கூடிய கந்தகம் இரண்டுமுறையும், போர்டோ கலவை ஒரு முறையும் தெளித்து உரத்தில் மட்டும் சில மாறுதல் செய்யப்பட்டது. 100 ராத்தல் தொழு உரமும், 3 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 2 ராத்தல் அமோனியம் சல்பேட்டும் போட்டதில் ஆரஞ்சு மரங்கள் பார்ப்பதற்கு கரும் பச்சை நிறமாகவும், அடர்த்தியாகவும், குடை விரித்தாற் போன்றும் காட்சி அளித்தது.



மரங்களுக்கிடையே 'குத்து பீன்ஸ்'

மேற்கண்ட முறை கையாளுவதற்கு முன்மரம்ஒன்றுக்கு 100முதல் 150பழங்கள் வரை தான் கிடைத்து வந்தன. அம் முறைகளை கையாண்டபின், அதாவது 1959-60-ல் கிடைத்த பழங்கள் நல்ல நிறமுடையதாகவும், பெரியதாகவும் (3 முதல் 4 அங்குலம் சுற்றளவுள்ளது) 4½ முதல் 6 அவுன்சு எடை உள்ளதாகவுமிருந்தன. மரம் ஒன்றுக்கு 1,500 முதல் 1,800 பழங்கள் வரை கிடைத்தன.



உரமிட்டு செழித்து வளர்ந்த மரங்கள்

இரண்டாவதாண்டு மேலும் முதலாண்டில் கூறிய படியே நிறம், பருமன், எடை இருந்ததோடு மரத்திற்கு 1,850 முதல் 2,000 பழங்கள் வரை கிடைத்தன.

ஆரஞ்சு பயிரிடுவோர் அனைவரும் நல்ல முன் எச்சரிக்கையோடு கவனமாக காலாகாலத்தில் நோயையும், பூச்சிகளையும் எதிர்த்து, உரிய காலத்தில் உரமிட்டு அதிக மகசூலை அடைய முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு வேண்டிய உதவி புரிய விவசாய இலாகா என்றும் காத்திருக்கிறது. ஆரஞ்சு விளைச்சலை அதிகப்படுத்தி நம் நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெற்பயிரைத் தாக்கும் சூரைப்பூச்சியும் அதன் தடுப்பு முறைகளும்

B. வேலாயுதம், G. வரதராஜன், நெற்பயிர்ப் பூச்சி ஆராய்ச்சி அலுவலகம், ஆடுதுறை

தமிழ் நாட்டில் நெல் ஏராளமான அளவில் பயிரிடப்பட்ட போதிலும், பற்றாக்குறை நாட்டில் நிலவுவதின் காரணம், நோயினாலும், பூச்சிகளினாலும் பயிர்கள் தாக்கப்படுவதேயாகும். இவற்றினின்று பயிரைக் காக்க, பயிரின் நிலை, அதன் விரோதிகளின் தன்மை ஆகியவற்றை விவசாயிகள் நன்கு அறிதல் அவசியம்.

நெற்பயிரில் காணும் பூச்சி நோய்களில் சூரை நோயும் ஒன்று. ‘சூரை நோய்’ எனக் கூறப்படினும், இது பூச்சியினால் ஏற்படுவதேயாகும். இப்பூச்சி, “உறிஞ்சியுண்ணும்” (Bug) இனத்தைச் சார்ந்தது. மேலும், பயிரில்லாத காலங்களிலும், உணவில்லாமல் கூட பல நாள் உயிர்வாழும் தன்மையை உடையது.

நன்றாக வளர்ச்சியடைந்த சூரைப்பூச்சியானது, பார்ப்பதற்கு, மாவால் மூடப்பட்டது போன்று முட்டை வடிவத்தில் காணப்படும். அதன் நீளம் 2–3 மில்லி மீட்டர் தான் இருக்கும். இப்பூச்சிகள் எல்லாவித நெல் ரகங்களையும் தாக்குகின்றன. நெற்சோலையின் உட்பக்கத்தில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு பயிரின் ரசத்தை உறிஞ்சி குடிக்கும். இதனால் பயிர் வலிவிழந்து, பசுமையிழந்து, பழுப்பு நிறமாகவும் இளஞ் சிவப்பாகவும் காணப்படும். இப்பூச்சி தாக்கப்பட்ட இடங்கள், திட்டுத் திட்டாகச் சற்றுக் குழிந்து காணப்படும். நாளாக, நாளாக இப்பூச்சியின் சேதம் அதிகரித்துக்கொண்டே போகும். தஞ்சை மாவட்டத்தில் சில ஆண்டுகளில், சூரைநோய் அதிக அளவில் தாக்கி, வயல் வயலாக காய்ந்து, பயிர் சருகு போன்று காணப்படும். முதிர்ந்த பயிர்களை தாக்கினால் நெற்கதிர், சவலையாக மாறிப் போய்விடும். இவை அனைத்தும் அனுபவமிகுந்த விவசாயிகளுக்கு புதியதல்ல. இவ்வாறு பதரான கதிர்கள் முழுதும் வளராது பயிரினுள் பாதியும் வெளிப்புறம் பாதியுமாகவிருக்கும். பயிர் பெரும்பாலும் தலை சாயாது நிற்கும். இவ்வாறு தாக்கப்பட்ட பயிரை சில சமயங்களில், கொலை நோயினால் தாக்கப்பட்டதோ என தவறுதலாக நினைக்கவும் கூடும்.

தாக்கப்பட்ட பயிரை பிடுங்கி அதன் தாள்களை விரித்தால் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு தாளிலும் 100-க்கும் மேலான பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

இப் பூச்சிகள் செல் ரசத்தை உறிஞ்சி முழு வளர்ச்சியடைந்தபோது கால்களே தெரியாத அளவு பெருத்துவிடும். இவற்றால் அதிகமாக நகர முடியாது. நன்றாக வளர்ந்த பூச்சி ஒவ்வொன்றும் 100-க்கும் மேற்பட்ட முட்டைகள் இடும். முட்டைகளினின்றும் வெளிப்படும் சிறு குஞ்சுகளால் ஏறக்குறைய ஐந்து நாட்கள் கூட உணவில்லாமல் இருக்க இயலும். இவை ஊர்ந்தோ, தண்ணீரில் மிதந்தோ அண்மையில் உள்ள தாக்கப்படாத பயிர்களுக்குச் சென்று தம் வாழ்க்கையை தொடங்குகின்றன. சுமார் ஒரு மாதத்தில் இவை முட்டையிடும்.

இப்பூச்சிகளின் இனப்பெருக்கம் மிக விரைவாகவும் அதிக அளவிலும் ஏற்படுவதால் பூச்சியின் தாக்குதல் கண்ட உடனேயே தக்க தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். இதன் உடம்பினை மாவு போன்ற வெள்ளைப் பிசின் மூடிக் கொண்டிருப்பதால், பி.எச்.சி., டி.டி.டி., என்டிரின் போன்ற பூச்சிக் கொல்லிகளை அடிப்பதால் எவ்வித பயனும் ஏற்படுவதில்லை. மேலும் மேற்சொன்ன மருந்துகளை அடிப்பதால் இப் பூச்சியின் இயற்கை விரோதிகளான சில வகை குளவிகள், வண்டுகள் மட்டும் இறந்து விடுவதால் பூச்சி அதிக அளவில் பரவ எதுவாகும். ஆதலால், பாலிடால் போன்ற பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தவேண்டும். பாலிடால் மருந்து 1 அவுன்சை $6\frac{1}{4}$ காலன் தண்ணீரில் கலந்து, பூச்சி தாக்கப்பட்ட இடங்களில் அடிக்கவேண்டும். சில வயலில் ஒரு குறிப்பிட்ட ஆண்டு தாக்கிய இடத்திலேயே மறு ஆண்டும் தாக்குதல் ஏற்படுவதைக் கூர்ந்து நோக்கினால் தெற்றென அறியலாம். அங்ஙனம் காணப்படும் வயல்களில் கோடைக் காலங்களில் அடித் தாள்களை கொளுத்தி இப் பூச்சியை அறவே ஒழிக்க வேண்டும். அக் குறிப்பிட்ட இடங்களின் அருகில் உள்ள புற்களில் இவை ஒட்டிக்கொண்டு கோடை காலத்தைக் கழிக்கும். மருந்தடிக்கும்போது அண்மையில் உள்ள புற்களுக்கும் மருந்தடிக்க வேண்டும் ; அல்லது புற்களையும் கொளுத்த வேண்டும்.

இவ்வாறு இந்த நெல் சூரைப் பூச்சியின் வளர்ச்சியையும் தன்மையையும் தக்க சமயத்தில் அறிந்து, தடுப்பு முறைகளைக் கையாண்டால் விளைச்சலை அதிகரித்து, சிறந்த பலனை அடையலாம்.

—(:)—

உணவு உற்பத்தியில் முழு மூச்சுடன் ஈடுபடு

பேயர் அக்ரோ கெம் லிமிடெட்

பம்பாய்-4.

52/54, ரத்தன் பஜார், மதராஸ்-3.

டிப்டெரெக்ஸ் S. P. 80%

நிலக்கடலையை படை படையாய் அழிக்கும் சிவப்புக் கம்பளிப் பூச்சியை—முற்றும் வளர்ந்த 20 நாட்களுக்கு மேற்பட்டவைகளையும்—அதி விரைவில் கண்டிப்பாக ஒழிக்க வல்லது கோயம்புத்தூர், பொள்ளாச்சி, விழுப்புரம் திருத்தணி, மதுரை, மேலூர், திருவள்ளூர், சிவகங்கை முதலிய இடங்களில் செய்த பரிசோதனைகளில் வெற்றிகண்ட மருந்து. பழச்செடிகளை அழிக்கும் புழுக்களை மிகச் சுலபமாகவும், சிக்கனமான முறையில் ஒழிக்கவும் சிபார்சு செய்யப்படுகிறது.

மெடானிஸ்டாக்ஸ் 25%

பயிர்களின் சாரத்தை உறிஞ்சி, விஷ வியாதிகளைப் (VIRUS DISEASE) பரவச்செய்யும் அசுவுணி, பேன், புகையான் இவைகளை அழிக்கும். பருத்தி, மிளகாய், கத்திரி, உருளைக்கிழங்கு, புகையிலை, காபி, தேயிலை முதலிய பயிர்களுக்கு ஏற்றது.

அஸன்டால், நெகுவான்

கால்நடைகள், ஆடு, கோழிகளைப் பாதிக்கும் பேன், உண்ணி, ஈக்கள் முதலியவைகளை ஒழிக்க சருமத்தின் மேல் பூசப்படும் சிறந்த மருந்து. கோழிப் பண்ணைகளில் விரும்பி உபயோகப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு, கேரளா பூர்ண விநியோகஸ்தர்கள்:

ஏ. வி. தாமஸ் & கம்பெனி லிட்.
தபால் பெட்டி 47, ஆலப்புழை.

ஏ. வி. தாமஸ் & கம்பெனி (இந்தியா) லிட்.
தபால் பெட்டி 1603, மதராஸ்-1.

கோயமுத்தூர் ஜில்லா :

ஆர். சுப்ரமண்யம்,
53, பொன்னுரங்கம் ரோட்,
ஆர். எஸ். புரம், கோவை.

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் :

ஏ. பி. வி. சன்ஸ்,
13, சுவாமி சந்நிதி வீதி,
கீழமாசி வீதி, மதுரை.

தஞ்சை, தென் அற்காடு ஜில்லாக்கள் :

ராஜராம் பிரேட்ஸ்,
பஜாஜ் மான்ஷன்,
வில்லியம்ஸ் ரோட், திருச்சி-1.

திருச்சிராப்பள்ளி ஜில்லா :

பி. எச். ஷேக் அலாவுத்தின்,
தபால் பெட்டி 462,
பாலக்கரை ரோட், திருச்சி-8.

திருநெல்வேலி ஜில்லா :

எஸ். ஆர் சுப்ரமண்ய பிள்ளை,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கன்னியாகுமரி ஜில்லா :

தாம்ஸன் ஏஜன்ஸிஸ்,
நாகர்கோவில்.

சேலம், ஏற்காடு :

தி ஏற்காடு காபி கியூரிங் வொர்க்ஸ் லிமிடெட்
கண்ணன்குரிச்சி போஸ்ட், சேலம்.

விவசாயச் செய்திக்கதிர்

(விரிவினைப் பிரிவு—கோவை.)

சமீபத்தில் கோவை கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் பொன்விழா கொண்டாடப்பட்டது. கரும்பு ஆராய்ச்சித் துறையில் இந்நிலையம் மிகச் சீரான பணி ஆற்றியுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன், சாகுபடியிலிருந்து வரும் உள்நாட்டு கரும்பு ரகங்களின் மகசூலையும் சர்க்கரைச் சத்தையும் அதிகப்படுத்த இந்நிலையத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல கரும்பு ரகங்கள் உலகத்தின் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளன. சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் உலகத்தின் எந்த நாட்டிலும் கோவைக் கரும்பு ரகங்களைக் காணலாம்.

சமீபத்தில் கொண்டாடப்பட்ட பொன்விழா இந்நிலையத்தின் மகத்தான சாதனைகளை அனைவருக்கும் நினைவூட்டும் விழா என்றே கூறலாம். இந்நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள பல கரும்பு ரகங்களில கோ. 419 ஒரு தலை சிறந்த கரும்பு ரகமாகக் கருதப்படுகிறது. தென்னாட்டில் கரும்பு சாகுபடி செய்யப்படும் 90 சதவீத பரப்பில் இந்த ரகம் பயிரிடப்படுகிறது. நல்ல மகசூல் அளிக்கவல்ல கரும்பு ரகங்களை கண்டுபிடிப்பதோடன்றி, கரும்புச் சாகுபடியின் பல துறைகளிலும் இந்நிலையம் ஆராய்ச்சி செய்து வருகிறது. 1912-ல் துவக்கப்பட்ட இந்நிலையம் இன்று இந்தியாவில் மட்டுமன்றி உலகத்திலேயே சிறந்த கரும்பு ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்றாகக் கருதப் படுகிறது.

சில முக்கியமான கரும்பு ரகங்களும் அவற்றின் தன்மைகளும்

கோ. 419.—பின்பட்ட நடவிற்கு ஏற்ற இந்த ரகம் ஜனவரி—ஏப்ரல் மாதங்களில் பயிரிடப்படுகிறது. இதன் பயிர்க்காலம் 12 மாதங்கள். எல்லா இடங்களிலும் சாகுபடி செய்வதற்கேற்றது. ஏக்கருக்கு 100 டன் வரை மகசூல் பெறலாம். கட்டைப் பயிராக வளர்ப்பதற்கும், வறட்சி, நீர்த்தேக்கம் ஆகிய நிலைகளில் சாகுபடி செய்வதற்கும் ஏற்றது. இதிலிருந்து நல்ல தரமுள்ள வெல்லம் தயாரிக்கலாம். ஆனால் இந்த ரகம் கரிப்பூட்டை நோயால் பாதிக்கப்படுகிறது. அறுவடை முன்னதாகவே செய்தால் சர்க்கரைச் சத்தின் அளவு குறைகிறது. சாதாரணமாக இதன் சர்க்கரைச் சத்து 19 சதவீதம். சாற்றின் தூய்மை 90 சதவீதம். ஆலைகள் உள்ள இடங்களுக்கும் வெல்லம் தயாரிப்பதற்கும் இது ஏற்றது.

கோ. 449.—பிப்ரவரி—மார்ச் மாதங்களில் பயிரிடப்படும் இந்த ரகம் நடுப்பட்டத்திற்கு உகந்தது. இதன் பயிர்க் காலம் 11-12 மாதங்கள். இதுவும் நல்ல மகசூல் அளிக்கிறது. இது கரிப்பூட்டை நோயையும், மஞ்சள் புள்ளி நோயையும் எதிர்க்கும் தன்மை வாய்ந்தது. முன்னதாகவே அறுவடை செய்தாலும் கரும்பின் சர்க்கரைச் சத்து குறைவதில்லை. இதில் 19 சதவீதம் சர்க்கரைச் சத்து அடங்கியிருக்கிறது. ஆலைகளுள்ள இடங்களில் சீக்கிரம் அறுவடை செய்வதற்கு இது மிகவும் ஏற்றது.

கோ. 527.—இது முன்பட்ட நடவிற்கு ஏற்ற கரும்பு ரகம். ஜனவரி மாதத்தில் பயிரிடப்படும் இதன் பயிர்க் காலம் 10½–11 மாதங்கள். இந்த ரகத்தில் பக்கச் சிம்புகள் நன்றாகக் கிளைத்து வளர்கின்றன. கட்டைப் பயிராக விடுவதற்கு மிகவும் ஏற்றது. கரிப்பூட்டை நோயை எதிர்க்க வல்லது. அடசாலிப்பட்டக் கரும்பு ஆகஸ்டு மாதத்தில் நடப்பட்டு டிசம்பர்—ஜனவரி மாதங்களில் அறுவடையாகிறது. இதன் பயிர்க்காலம் 15–16 மாதங்கள். ஆலைகளுள்ள இடங்களுக்கும், தரமான வெல்லம் தயாரிப்பதற்கும் ஏற்றது. இதன் சர்க்கரைச் சத்து 20 சதவீதம். சாற்றின் தூய்மை 95 சதவீதம். இது வறட்சியைத் தாங்கும் தன்மை வாய்ந்தது. கரும்பு சாகுபடியாகும் இடங்களில் கோ. 419 ரகத்துக்குப் பதில் இந்த ரகம் சிறிது சிறிதாகப் பரவி வருகிறது.

கோ. 658.—இது கோ. 605, கோ. 443 ஆகியவற்றின் ஒட்டுச் சேர்க்கையால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புது ரகம். இது எல்லா இடங்களிலும் பயிரிடுவதற்கு ஏற்றது. 10½–11 மாதங்களில் அறுவடைக்கு வருகிறது. இதில் கோ. 419, கோ. 449 ஆகிய ரகங்களைக் காட்டிலும் சர்க்கரைச் சத்து அதிகமாக அடங்கியிருக்கிறது. கோ. 419 ரகத்தைப் போல் கரிப்பூட்டை நோயால் பாதிக்கப்படுவதில்லை.

பழ ஈக்களைக் கட்டுப்படுத்துதல்

சாதாரணமாக நம் வீடுகளில் காணப்படும் ஈயைப் போன்றே காட்சியளிக்கும் இப்பழ ஈக்கள் செடிகளையும், பூசணி வர்க்கத்தைச் சேர்ந்த காய்கறிகளையும் தாக்குகின்றன. இவற்றின் உடல் மூக்கோண வடிவமுடையதாகவும் நன்கு விரிந்த இறக்கையோடும் அமைந்திருக்கிறது. இறக்கையில் ஒரு புள்ளியும் இருக்கிறது. பற்பல வகையான பழவர்க்கங்களை பல இனங்களைச் சேர்ந்த இந்த ஈக்கள் தாக்குகின்றன. இவற்றின் தாக்குதலினால் பழங்களின் தரம் குறைந்து விடுவதால் பழவர்க்கத் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இப்பழ ஈக்களினால் தாக்கப்படும் பயிர்களில் முக்கியமானது மாமரம். மாம்பழத்தைத் துளைத்து சதைப் பாகத்தை உண்பதால் பழம் சேதமடைகிறது. தாக்குதல் தீவிரமாக இருந்தால் பழம் அழுகிக் கீழே உதிர்ந்து விடும். பழத்தின் தோலுக்குள் முட்டைகள் இடப்படுகின்றன. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள்தான் மேற்கூறியபடி சேதத்தை விளைவிக்கிறது. (கூட்டுப் புழுப் பருவம் பத்து நாட்கள் வரை மண்ணில் நீடிக்கிறது) 0·1 சத வீதம் டி. டி. டி. (50 சத வீதம் நீரில் நனையும் தூள்) மருந்தை அடிப்பதன் மூலம் இதை ஒருவாறு

கட்டுப்படுத்தலாம். இந்த ஈக்கள் நிழலுக்காக வேலிகளில் கூட்டமாகச் சேர்ந்து உட்காரும் தன்மை உடையவை. ஆகவே வேலிகளில் இருக்கும் ஈக்கூட்டங்களின் மீது டி.டி.டீ. அல்லது 0·25 சத பாரதியான் மருந்து அடிப்பதன் மூலமும் இதை ஒருவாறு கட்டுப்படுத்தலாம்.

பூசணி வர்க்கச் செடிகளில் பழ ஈக்கள்

பூசணி வர்க்கச் செடிகளில் பாகற்காய் இப்பூச்சிகளால் அதிகமாகத் தாக்கப்படுகிறது.

பாகற்காயைச் சேதப்படுத்தும் ஈக்கள் அருகிலுள்ள பீர்க்கங் கொடியின் அடர்த்தியான பசுமையான இலைகளின் அடிப்பாகத்தில் நிழலுக்காக கூட்டமாகச் சேர்ந்து உட்காருவது கவனிக்கப்பட்டது. ஆகவே அத்தகைய ஈக் கூட்டங்களின் மீது டி. டி. டீ ஒரு சத வீத மருந்தைத் தெளிப்பதன் மூலம் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சி கோவையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பீர்க்கங் கொடி சிறிது தூரம்வரை செங்குத்தாக வளரவிட்டுப் பின் அடர்ந்த பசும் இலைப்பரப்பை உடையதாகச் செய்வதற்கு பந்தலில் இடையாகப் படர விடப்பட்டது. பாகற் கொடியைக் காய்களில் முட்டையிடுவதற்கு மட்டுமே இந்த ஈக்கள் நாடுவதால் பாகற்கொடிக்கு மருந்தடிப்பதைவிட அருகிலிருக்கும் பீர்க்கங் கொடியில் கூட்டமாகச் சேரும் ஈக்களின் மேல் மருந்தடிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். ஒரு அவுன்சு டீல்ட்ரின் 50 சத மருந்தை மூன்று காலன் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலமும் இதை கட்டுப்படுத்தலாம். மருந்து தெளிப்பதற்கு முன் கொடியிலுள்ள காய்களை எடுத்துவிடவேண்டும். அறுவடை முடிவதற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பே மருந்து தெளித்தலை நிறுத்திவிடவேண்டும்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள்

ஆழம் குறைவான மணற்பாங்கான பூமியில் ஊறும் நீரைப் பாசனத்துக்காக உபயோகப்படுத்த உதவும் ஒரு சாதனமே வடிமுனைக் குழாய்க் கிணறு எனப்படுகிறது. தமிழ் நாட்டில் நதிக்கரையோரப் பிரதேசங்களிலும் நிரந்தரமாக நீர் கிடைக்கும் இடங்களுக்கு அருகிலும் இத்தகைய வடிமுனைக் குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் பிரதேசத்திலும், திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் பகுதியிலும், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மணற்பாங்கான பகுதிகள் ஆகியவை வடிமுனைக் குழாய்க் கிணறுகள் நிறுவுவதற்கு ஏற்றவை 8,000—10,000 காலன் தண்ணீர் இறைக்கக் கூடிய ஒரு வடிமுனைக் குழாய்க் கிணற்றிலிருந்து பத்து ஏக்கர் நிலத்துக்குப் பாசனம் செய்யலாம்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகளால் பல நன்மைகள் உண்டு. இவற்றைச் சிக்கனமாகவும் எளிதிலும் நிறுவலாம். அதிகமான இடத்தையும் அடைத்துக் கொள்வதில்லை. மணற்பாங்கான பூமிகளில் சாதாரணமான திறவு கிணறு வெட்டினால் நாளடைவில் மண் சிறிது சிறிதாகச் சரிந்து கிணறு உபயோகமற்றதாய்ப் போய்விடும். இதைத் தவிர்க்க இத்தகைய இடங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை இறக்கலாம். ஒரு வடிமுனைக் குழாய்க் கிணறு நிறுவ ரூபாய் 350—450 தான் ஆகும். 3 அங்குல குழாய்க் கிணறுக்கு 5. H. P. மோட்டாரும், $3'' \times 2\frac{1}{2}''$ பம்பும், 4 அங்குல வடிமுனைக் குழாய்க் கிணறுக்கு 7. H. P. என்ஜினுடன் $4'' \times 3''$ பம்பும் தேவைப்படும். வடிமுனைக் குழாய்க் கிணறைச் சுற்றி மண்ணில் ஊற்றுகள் இருப்பின் ஒரு மணி நேரத்தில் 12,000— 15,000 காலன் தண்ணீர் இறைக்கலாம். தமிழ் நாட்டின் பல பாகங்களில் குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டு திருப்திகரமான முறையில் நீர்ப்பாசனத்துக்கு உபயோகப்படுகின்றன.

மரவள்ளிக் கிழங்கு ஒரு துணை உணவுப்பயிர்

மாவுச் சத்து மிகுந்த மரவள்ளிக் கிழங்கு ஒரு சிறந்த துணை உணவுப்பயிர். தற்போது இது முக்கியமாக சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் சாகுபடியாகிறது. மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் மாவு, சவ்வரிசி, ஸ்டார்ச் ஆகியவற்றிலிருந்து பற்பலவகையான உருசிமிக்க தின்பண்டங்களைத் தயாரிக்கலாம். ஜவுளித் தொழிலுக்கும், குளுகோஸ் தயாரிப்புக்கும் மரவள்ளிக் கிழங்கு உபயோகப்படுகிறது.

பல உள்நாட்டு ரகங்கள் சாகுபடியில் இருந்த போதிலும் அவை திருப்திகரமான அளவு மகசூல் அளிப்பதில்லை. கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் ஏக்கருக்கு 25,000 ராத்தல் வரை மகசூல் தரக்கூடிய 'மலவெள்ளா', 'ஆனைக் கொம்பன்' என்ற இரு ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்விரு ரகங்களும் சமைப்பதற்கு மிகவும் ஏற்றவை. 'மலவெள்ளா' ரகத்தின் கிழங்கு பழுப்பு நிறமுடையதாகவும் 'ஆனைக்கொம்பன' ரகத்தின் கிழங்கு வெண்மை நிறமுடையதாகவும் இருக்கும்.

8"—9" நீளமுள்ள குச்சிகள் அல்லது புள்கள் நடவிற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. 100 கிலோகிராம் அமோனியம் சல்பேட்டை இரண்டு அல்லது மூன்று தடவைகளில் இடுவதன் மூலம் இக்கிழங்கின் மகசூலைக் கணிசமான அளவு அதிகப்படுத்தலாம்.

ஒரு ஏக்கர் நெற்பயிரிலிருந்து கிடைக்கும் அரிசியிலுள்ள மாவுச் சத்தைப் போல் நான்கு மடங்கு சத்தை ஒரு ஏக்கர் மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறலாம். அமோனியம் பாஸ்பேட் ஏக்கருக்கு 100 கிலோகிராம் வீதம் அடி உரமாக இடுவது நல்ல பலனளிக்கிறது. ஒரு ஏக்கரிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருளின் அளவை அதிகப்படுத்த தற்போது ஏற்பட்டுள்ள அதிக தேவையைப் பூர்த்தி செய்ய துணை உணவுப் பயிரான மரவள்ளிக் கிழங்கு சாகுபடி உதவும் என்பதில் ஐயமில்லை.

பங்குனி-சித்திரை மாத விவசாய குறிப்புகள்

நெல்

(நெல் ஆராய்ச்சி நிபுணர்.)

நவரைப் பயிருக்கு ஊடுழவு கொடுத்தல், திருச்சிப் பகுதிகளில் 2-வது முறை இரசாயன உரமிட்டு ஊடுழவு செய்தல்; கலப்புக் கதிர்களைதல்.

கார், குறுவைப் பயிர்களுக்கு நாற்றங்கால் தயாரித்தல். (ஏ.டி.டீ. 20, ஏ.டி.டீ. 3 சிறந்த குறுவை ரகங்கள், டி.கே.எம். 2, டி.கே.எம். 6, பி.எல்.ஆர். 2, எம்.டி.யு. 20 போன்றவை சிறந்த கார் ரகங்கள்) கோவை பகுதிகளில் 2-ம் போகப் பயிரிக்கு ஊடுழவு கொடுத்தல்.

சிறு தானியம் பயறு வகைகள்

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர்.)

ராகி நாற்றங்கால் விதைப்பு, சோளம், கம்பு, சித்திரைப் பட்ட விதைப்பு—கே. 2 ரகச்சோளமும், எக்ஸ். 3, கோ. 4, கோ. 5 கம்பு ரகங்களும் இப்பட்டத்திறகேற்ற உயர்ந்த ரகங்கள்.

எண்ணெய் வித்துக்கள்

(எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிபுணர்.)

இறைவை நிலக்கடலை.—கோடைப் பயிருக்கு போதிய அளவு தண்ணீர் விடவும். பிந்தி விதைத்த பயிரில 2-வது முறையாகவும், முன்போகப் பயிரில் முதன் முறையாகவும் கொத்திக் களையெடுக்கவும். வரிசையில் விதைத்த பயிரில் தந்திகள் ஓட்டவும்.

மானவாரி.—கோடை மழை இருந்தால் முதன் முறை இரும்புக் கலப்பை ஓட்டவும். கோவை, சேலம், திருச்சி பிரிவுகளில் 4-6 உழவுகள் கொடுக்கப்படுகின்றன. ஏக்கருக்கு 10 வண்டி மாட்டு எரு அல்லது கம்போஸ்டு இடவும். 56 ரா. அமோனியம் சல்பேட், 56 ரா. மியூரியேட் ஆப் பொட்டாஷ், 112 ரா. சூப்பர் முதலிய வற்றையோ அல்லது 280 ரா. உரக் கலவையையோ இடவும் ஜூனியர் ஹோ கருவி ஓட்டி உரத்தை நன்கு மண்ணுடன் கலக்கச் செய்யவும்.

பொள்ளாச்சி தாலுக்காப் பகுதிகளில் சித்திரை 2-வது வாரம் கடலை விதைப்பு—கீழ்க்கண்ட இடைவெளி விடவும்.

	வரிசைக்கு வரிசை.	வரிசையில்.
கொத்து ரகம்	12″	4″
கொடி ரகம்	18″	3″

தென்னை.—முன்னெச்சரிக்கையாக தகுந்த பயிர்ப் பாது காப்பு முறைகளைக் கையாளவும்.

பருத்தி

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர்)

மாசிப்பட்ட கம்போடியா பருத்தி.—பங்குனி முடிவிற்குள் விதைத்து முடிக்கவேண்டும். ஏக்கருக்கு 20 ராத்தல் விதை போதுமானது. குழிக்குக் குழி 9″ இடைவெளி விட்டு குழிக்கு 3, 4 விதைகள் விதைக்கவும். விதைக்கு முன் 15 ரா. விதைக்கு 1 அவுன்சு அக்ரசான் மருந்து கலக்கவும். சித்திரை 2–வது வார முடிவில் முதன் முறையாக என்டிரின் மருந்து (1 அவுன்சு/6¼ காலன் தண்ணீர்) தெளிக்க வேண்டும். வண்டு விழுந்து வாடிய செடிகளை உடனடியாக அப்புறப்படுத்தவும். விதைத்து 25 நாட்களுக்கு பின் கையால் களையெடுத்து, பின் ஒரு முறை கொத்துக்களை எடுக்கவும்.

தரிசு நெல் வயல்களில் பயிரிடும் பருத்தி.—2-வது முறை கொத்துக்களை எடுக்கவும். என்டிரின் மருந்து ஒரு முறை தெளித்து 15–20 நாட்களுக்குப் பின் 1 அவு. பாலிடால் மருந்தை 12 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். முதன் முறை இரசாயன உரம் இட்டு 25 நாட்களுக்குப்பின் மறுபடியும் ஏக்கருக்கு 100 ரா. வீதம் அமோனியம் சல்பேட்டு போட்டு போதிய அளவு தண்ணீர் பாய்ச்சவும்.

பழம் காய்கறி வகைகள்

சித்திரை மாத குறிப்புகள்.—கோடை மழைக்குப்பின் 2–3 முறைகள் தோட்டங்களை உழுது களை எடுக்கவேண்டும். கொளிஞ்சி, சணப்பு போன்ற தழை உரச் செடிகளை பழத் தோட்டங்களில் ஊடு பயிராக விதைக்கவும். கத்தரி, தக்காளி, வெண்டை விதைக்கலாம்.

விவசாயிகளுக்கு வேளாண் துறையால் வழங்கப்படும் சலுகைகள்

பூச்சி மருந்துகளை பாதி விலைக்கு வழங்குதல்

(அரசாங்க ஆணை 2529, 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ந் தேதி.)

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு அப்பயிருக்கான பூச்சி மருந்துகள் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் தொடர்ந்து இன்னும் ஒரு வருடத்திற்கு பாதி விலைக்கு வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

1962-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை

சி. பாலசுப்ரமணியன், ம. வி. ஐயராமன், சி. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.

இம்மாதம் முதல் தினத்தில் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. பின்னர் இரண்டு நாட்கள் பரவலாக மழை பெய்தது. 4-12-62-ம் தேதியன்று ஆங்காங்கும் 5-12-62 முதல் 7-12-62 வரை சிற்சில இடங்களிலும் மழை இருந்தது. அதன் பின்னர் 17-12-62 தேதி வரை வறட்சி நிலை நிலவியது. ஆனால் 18-12-62, 19-12-62 தேதிகளில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. அதையடுத்து ஆறு நாட்கள் பொதுவாக வறட்சி நிலை நிலவியது. 29-12-62ம் தேதியன்று மாநிலத்தின் தென் பகுதிகளில் சிற்சில இடங்களில் மழை இருந்தது. ஆனால் வட பகுதியில் வறட்சி நிலவியது. இம்மாதம் கடைசி இரண்டு நாட்களிலும் பொதுவாக வறட்சி நிலவியது. 13-12-62 முதல் 19-12-62 வரை இரவில் வெப்ப நிலை சராசரிக்கும் தாழ்ந்திருந்தது. ஏனைய நாட்களில் இரவு வெப்பம் பொதுவில் மிகுந்திருந்தது.

கால நிலையும், பயிர் வளர்ச்சியும்.—

செங்கற்பட்டு மாவட்டத்தில் மழை மிகக் குறைவு. ஆகையால் நெற்பயிர் சிறிது வளர்ச்சி குன்றியது. வட ஆற்காட்டில் மழை பொதுவாக எல்லாப் பயிர்களுக்கும், நிலக்கடலை அறுவடைக்கும் பயன்பட்டது. ஆனால் கரும்பு சில இடங்களில் தலை சாய்ந்தது. தென் ஆற்காட்டில் மழைக் குறைவினால் நிலக்கடலைப் பயிர் பாதிக்கப்பட்டது. ஆமணக்கை கொக்கிப் புழு, வெட்டுப் புழு, செஞ்சிலந்தி ஆகிய பூச்சிகளும் இலைப் புள்ளி நோயும் தாக்கின. எள் பயிரை இலைக் கூட்டுப் புழுக்கள் தாக்கின. நெற்பயிரில் சூரையும், குருத்துப் பூச்சியும் கண்டன. தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை தாளடி நெற்பயிருக்கு பயனுள்ளதாயிற்று. ஆனால் சம்பாவுக்கு உகந்ததாயில்லை. சம்பாப் பயிரைக் குருத்துப் பூச்சியும், இலைப்புள்ளி நோயும் மிதமாகவும், கொலை நோய் சிறிதளவும் தாக்கின. தாளடிப் பயிரைக் குருத்துப்பூச்சி, ஆனைக் கொம்பு, சூரை, கொலை நோய் ஆகியவை மிதமாகத் தாக்கின. திருச்சி மாவட்டத்திலும் நெற் பயிரில் சூரை, தத்துப் பூச்சி, குருத்துப் பூச்சி. ஆகியவை காணப்பட்டன. மதுரை ஜில்லாவில் பெய்த மழை நெல், பருத்தி ஆகியவைகளுக்கு உகந்ததாயிருந்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை போதிய அளவு இல்லை. திருநெல்வேலி மாவட்டத்திலும் மழை மிகக் குறைவு. இங்கு பருத்தியில் காய்ப் புழுக்கள், தண்டுபூச்சி, தத்துபூச்சி முதலியவை கண்டன. மிளகாய்ப் பயிரை த்ரிபஸ் பெருவாரியாகத் தாக்கிற்று. கன்னியாகுமரி மாவட்டத்தில் நெற்பயிரை குருத்துப் பூச்சியும் இலைப் புள்ளி நோயும் பெருமளவில் தாக்கின. சேலம், கோவை மாவட்டங்களில் மழையினால் பருத்தி பாதிக்கப்பட்டது. அப்பயிரில் காய்ப் புழுக்களும் தத்துப் பூச்சியும் காணப் பட்டன. மானாவாரிப் பருத்திக்கு மழை மிகவும் பயன் பட்டது. புகையிலையில் அசு பெருமளவில் கண்டது. நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர் உறை பனியாலும் அழுகல் நோயாலும் பாதிக்கப்பட்டது. அங்கு பெய்த மழையாலும் பின்பட்ட உருளைக்கிழங்குப பயிருக்கு நன்மை பயத்தது.

இம்மாதம் குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

வரிசை எண். (1)	தேதி. (2)	இடத்தின் பெயர். (3)	மழையளவு. (அங்குலத்தில்) (4)
1	2—12—1962	நஞ்சநாடு	2·27
2	ஷை	கூனூர்	6·42
3	ஷை	உதகமண்டலம்	2·20
4	4—12—1962	விவசாயக் கல்லூரி, கோயம்புத்தூர்-3.	3·16

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர். (1)	டிசம்பர் மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
வட பிராந்தியம்	2·2	—1·5	குறைவு
கீழ்க்கரை பிராந்தியம்	2·2	—4·4	மிகக் குறைவு
மத்திய பிராந்தியம்	2·6	+0·5	சற்று அதிகம்
தென் பிராந்தியம்	2·0	—2·3	மிக குறைவு
மலைப் பிராந்தியம்	5·3	+1·4	அதிகம்

1962-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை
மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர் (1)	இம்மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	2·0	—3·4	53.8
திரூர்குப்பம் *	1·2	—3·4	45·8
வேலூர்	4·1	+1·4	46 5
குடியாத்தம் *	1·6	—0·5	37·6
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	2·5	—3·4	32·5
திண்டிவனம் * ..	0 3	—2·5	45·4
கடலூர்	2·6	—4·9	47·6
நாகப்பட்டினம் ..	2·7	—8·2	48.3
ஆடுதுறை *	3·9	—1·9	47·8
பட்டுக்கோட்டை * ..	0·8	—5·4	42·4
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	2·0	—1·0	42·7
கோயம்புத்தூர் * ..	4·6	+3·0	30·2
கோயம்புத்தூர் ..	2·8	+1·7	29·0
திருச்சிராப்பள்ளி ..	0·8	—1·8	31·1
தென் பிராந்தியம்.			
மதுரை	1·1	—0·9	30·9
பாம்பன்	4·4	—3·2	38 3
கோவில்பட்டி * ..	0·5	—1·9	23·8
பாளையங்கோட்டை ..	1·5	—2·8	26·5
அம்பாசமுத்திரம் * ..	1·6	—2·7	36·0
நாகர்கோவில் * ..	3·3	..	56·3
கன்னியாகுமரி * ..	1·8	—0·1	38·7
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல் ..	3·9	—1·3	57·8
கூனூர் *	10·5	+4·2	66·5
உதகமண்டலம் * ..	3·3	+0·9	57·0
நஞ்சநாடு *	3·3	+1·3	68·4

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

இளம் விவசாயிகள் பயிற்சிக் கருத்தரங்கு

தரங்கம்பாடி (11—2—1963 முதல் 17—2—1963 முடிய)

பி. பரதன், B.Sc. (Ag.), விவசாயச் செய்தி நிலையம், சென்னை.

இளம் விவசாயிகள் சங்கங்களின் நோக்கம், இளம் விவசாயிகள் சங்கங்கள் அமைத்து, விஞ்ஞான முறை சாகுபடி போன்றவற்றை விளக்கி பயிற்சி அளித்தல் தரங்கம்பாடியில் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ந் தேதியன்று இளம் விவசாயிகள் சங்கக் கருத்தரங்கு ஆரம்பமாயிற்று. கருத்தரங்கு ஆரம்பமாவதற்குமுன், கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த இளம் விவசாயிகளையும், கருத்தரங்கு ஆரம்ப விழாவிற்குத் தலைமை தாங்கிய தஞ்சை தீவிர சாகுபடித் திட்ட கூட்டு விவசாய இயக்குநர் திரு. டி. எஸ். ஃபிரான்சிஸ் அவர்களையும், கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த மாநில விவசாயச் செய்தி அலுவலர் திரு. எம். ஜே. டேவிட் அவர்களையும் இளம் விவசாயிகள் சங்கக் காரியதரிசி திரு. ஜார்ஜ் மானுவேல அவர்கள் வரவேற்றார். கருத்தரங்கு ஆரம்ப வைபவத்திற்கு தஞ்சை தீவிர சாகுபடித் திட்ட கூட்டு விவசாய இயக்குநர் அவர்கள் தலைமை தாங்க, மாநில விவசாயச் செய்தி அலுவலர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

தலைவர் அவர்கள் பேசுகையில் இளம் விவசாயிகள் இவ்விதக் கருத்தரங்குகளில் திரளாகக் கலந்துகொண்டு விஞ்ஞான சாகுபடி முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியை பெருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மேலும் அவசரகால நிலைமையை முன்னிட்டு இளம் விவசாயிகளின் பொறுப்பு பல மடங்கு அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டி, கருத்தரங்கங்களில் கலந்து கொண்ட இளம் விவசாயிகளை இப் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும் ஒரு வார காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும் வலியுறுத்தினர். கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து மாநில விவசாயச் செய்தி அலுவலர் அவர்கள், இளம் விவசாயிகள் சங்கத்தின் நோக்கங்களையும் சங்கங்களை அமைப்பது பற்றியும், எவ்வாறு இளம் விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நாட்டிற்குச் சிறந்ததொரு சேவையைச் செய்யமுடியுமென்பதையும் விரிவாக எடுத்துக் கூறினர், மேலும் அமெரிக்காவில் எவ்வாறு இளம் விவசாயிகள் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுகின்றன என்பதைப் பற்றியும், அது போன்றே நம் நாட்டிலும் இளம் விவசாயிகள் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படவேண்டுமென்றும் கேட்டுக் காண்டார். அவசர கால நிலைமையில் இளம் விவசாயிகள் ஊக்கத்துடன் பாடுபட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டிற்குச் சேவை செய்யவேண்டுமென வலியுறுத்தினர்.

நம் நாட்டின் இதர பகுதிகளில் இளம் விவசாயிகள் சங்கங்கள் தீவிரமாகச் செயல்படுவதையும், ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி, இதர திருந்திய தீவிர சாகுபடி முறைகள் இவைகளைப் பற்றிய செய்திப் படங்கள் கருத்தரங்கில் பங்குகொண்ட இளம் விவசாயிகளுக்கு விளக்கிக் காட்டப்பட்டன. பொறையாற்றிலுள்ள இளம் விவசாயிகள் சங்கத்தை கருத்தரங்கில் பங்கு கொண்ட இளம் விவசாயிகள் நேரில் சென்று பார்த்தனர். அந்த சங்கத்திலுள்ள இளம் விவசாயிகள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் விஞ்ஞான சாகுபடி முறைகளைக் கையாண்டு பயிர் செய்திருந்த பல பயிர்களையும் கண்டனர்.

இரண்டாம் நாளன்று சென்னை வேலையில் அமர்த்தும் அலுவலர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'உளவியலும் மனித உறவும்' என்பது பற்றி பயிற்சியாளர்களுக்கு ஓர் இனிய சொற்பொழிவு ஆற்றினர். மாலையில் விஞ்ஞான சாகுபடி முறைகளை விளக்கிக் காட்டும் செய்திப்படங்கள் பயிற்சியாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. கருத்தரங்கில் பங்குகொண்ட எல்லா விவசாயிகளும் செய்திப்படங்களை மிகவும் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

விளம்பரக் கட்டண விகிதங்கள்

	ஒரு முறை வெளியிட. ரூ.
உள் தாள்களில் (inside pages) முழுப் பக்கம்.	120
உள் தாள்களில் அரை பக்கம் ..	60
உள் தாள்களில் கால் பக்கம் ..	30
உறைத்தாள் (cover page) உள் பக்கம் முழுவதும்.	150
பின்புற உறைத்தாள் (back cover page) வெளிப் பக்கம் முழுவதும்.	200

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

கிராம நிகழ்ச்சிகள்—ஏப்ரல் 1963

திங்கள் (1—4—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவு பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்
வீரக்கனி—நாடகம்
(என். இராகவன் அவர்கள் எழுதியது)

செவ்வாய் (2—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. பசுந்தாள்பயிர் சாகுபடி

புதன் (3—4—1963)

கரும்புச் சாகுபடிக்கு உபயோகமான வழிகள்—
உரையாடல்
சேமித்து வைப்போம்
நாட்டுப் பாடல்கள்

வியாழன் (4—4—1963)

நமது திட்டம்— கோர்பா தொழிற்சாலை
மெல்லிசை
செய்தி விமர்சனம்.

வெள்ளி (5—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. கிராமத் தொண்டர் அணியும் தீவிர சாகுபடித் திட்டமும்.

சனிக்கிழமை (6—4—1963)

முதியோர் கல்விக்கூடம்—திருக்குறள் விளக்கம்
நம் மாதர் மன்றம்—
1. நமது பங்கு
2. உலக சுகாதார தினம்
3. சத்ய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (7—4—1963)

கிராமச் சிறுவர்கள் நிகழ்ச்சி
கிராமம் போவோமே—செய்திச் சித்திரம்.

திங்கள் (8—4—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவுப் பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்
காதுகுத்து

செவ்வாய் (9—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. பசுக்களின் மலட்டுத் தன்மை

புதன் (10—4—1963)

மீன் வளர்ப்பு—உரையாடல்
நாட்டுப் பாடல்கள்
வீரகவசம்—இசைச் சித்திரம்
(எழுதியர் என். இராகவன்)

வியாழன் (11—4—1963)

நமது திட்டம்—கிராமங்களில் ரெயில்வே கூட்டுறவு திட்டம் : உரையாடல்.
மெல்லிசை
செய்தி விமர்சனம்.

வெள்ளி (12—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்.—
1. கேள்வி—பதில்
2. தங்கக் கட்டுப்பாட்டின் அவசியம்.

சனிக்கிழமை (13—4—1963)

முதியோர் கல்விக்கூடம்—பாரதத்தின் வரலாறு.
நம் மாதர் மன்றம் —
1. நமது பங்கு
2. எங்கள் கிராமத்தில்
3. சத்ய நெறி
4. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (14—4—1963)

கிராமச் சிறுவர்களுக்கு நிகழ்ச்சி
நம் நாடு விவசாயி
புதுக்கணக்கு—நாடகம் (என். இராகவன் அவர்கள் எழுதியது).

திங்கள் (15—4—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவு பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்
சக்திவேலு சந்தேகப்புலி—தொடர் சித்திரம்—
(எஸ். எம். அப்துல் காதர் எழுதியது.)

செவ்வாய் (16—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்.—
1. கேள்வி—பதில்
2. கண் பாதுகாப்பு

புதன் (17—4—1963)

ராபீஸ் நோய்—உரையாடல்
கிராம பொதுநல சங்கம்
நாட்டுப்பாடல்கள்

வியாழன் (18—4—1963)

நமது திட்டம்—
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விஞ்ஞானம்—உரையாடல்.
மெல்லிசை
செய்தி விமர்சனம்.

வெள்ளி (19—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்.—
1. கேள்வி—பதில்
2. முப்படையில் சேர்வது எப்படி ?

சனிக்கிழமை (20—4—1963)

முதியோர் கல்விக்கூடம்—திருக்குறள் விளக்கம்
நம மாதர் மன்றம்—
1. நமது பங்கு
2. அப்பக்கார அங்காயி—தொடர் சித்திரம்
(எழுதியது என். வாசுதேவன்)
3. சத்ய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி

ஞாயிறு (21—4—1963)

கிராமச் சிறுவர்களுக்கு நிகழ்ச்சி
ஆதி சங்கரர்—காலக்ஷேபம்

திங்கள் (22—4—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவுப் பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்
படை வீடு— இசைச் சித்திரம்
(எழுதியது என். ராகவன்)

செவ்வாய் (23—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. கூட்டுறவு பண்டகசாலை

புதன் (24—4—1963)

ஆராய்ச்சிக்கூடம்—உரையாடல்
செய்தித்தாள்
நாட்டுப் பாடல்கள்

வியாழன் (25—4—1963)

நமது திட்டம்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் —உரையாடல், நிலதர பாதுகாப்பு.
மெல்லிசை
செய்தி விமர்சனம்

வெள்ளி (26—4—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. பூமிசேனையில் நம் பங்கு

சனிக்கிழமை (27—4—1963)

முதியோர் கல்விக்கூடம் : சங்க இலக்கிய விளக்கம்
நம் மாதர் மன்றம்.—
1. நமது பங்கு
2. சிறுவட்டிக் காசு
3. சத்திய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (28—4—1963)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
கிராமச் சாவடி ஒலிபெருக்கி வழக்கு விசாரணை

திங்கள் (29—4—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவுப் பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்
வளரும் தமிழகம்

செவ்வாய் (30—4—1963)

ஒன்றே குலம்
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்
2. விபத்தும் முதலுதவியும்

இரும்புக் கலப்பையால் உழவற உழுது பழுதற விளைவிப்பீர்

தரங்கம்பாடியில் இளம் விவசாயிகள் கருத்தரங்கு

பொறையாறு இளம் விவசாயிகள் சங்க மாணவர்கள காய்கறித் தோட்ட வேலை செய்யும் கரட்சி

தோட்ட வேலை செய்யும் மாணவர்களை திரு டி. எஸ் பிரான்ஸிஸ், கூட்டு வேளாண்மைத் துறை நெறிபாளர் (தீவிர சாகுபடித்திட்டம்), தஞ்சாவூர், மாநில விவசாயச் செய்தி அலுவலர், சங்கக் காரியதரிசி திரு. மானுவேல் முதலியோர் பார்வையிடுகிருர்கள



கருத்தரங்கில் மாநில விவசாயச் செய்தி அலுவலர், திரு எம் ஜே. டேவ்ட உரையாற்றுகிருர்

Registered No. M-4646

© தமிழ்நாடு அரசாங்கம் 1963

27-1-63 அன்று ஈசசம்பாக்கம் கிராமத்தில் காய்கறி பெருக்க விழா



திருமதி ராஜலக்ஷ்மி ரங்காச்சாரி, விவசாயிகள் மன்றக் கூட்டுக் காரியதரிசியின் தலைமை உரை.

வேளாண்மைத் துறை நெறியாளர் திரு. V. கார்த்திகேயன், I.A.S. அவர்கள்
கிராம மக்களுக்கு காய்கறி நாற்றுகள் வழங்குதல்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.